Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 17 (12.12.2003) வெள்ளிக்கிழமை இதழ்:73

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310
(சி-1771)

## பஸ் நிலைய தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து குடாநாட்டில் பூரண ஹர்த்தால்!



வெறிச்சோடிய யாழ்.நகரப் பகுதி வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையப் பகுதியில் வைத்து படையினர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்த சம்பவத்தை கண்டித்து நேற்று குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தாலின் காரணமாக அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் உட்பட அனைத்தும் மூடப்பட்டிருந்தன. க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி காலை வேளை வடபிராந்திய போக்குவரத்துசபை பஸ்வண்டிகள் சேவையிலீடுபட்டன. இருப்பினும் காலை 10 மணியுடன் அதுவும் இடைநிறுத்தப்பட்டது.

இதனால் பரீட்சை முடிந்து வந்த மாணவர்கள் வீடு செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலை ஏற்பட்டது. அந்தவேளையில் தனியாருக்கு சொந்தமான ஹைஏஸ் வான்கள் மூலம் மாணவர்கள் வீடு செல்லக்கூடிய ஒழுங்குகள் இளைஞர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்டன. (10 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதி

## அரசியல் நெருக்கடிநிலை குறித்து ஆராய

# அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரி அடுத்த வாரம் கொழும்புக்கு வருகின்றார்!

(வொஷிங்ரன்)

**இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிகள் குறித்து நேரில் ஆராய்ந்து அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்காக - அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.**

கொழும்பு அரசியல் நிலைவரம் குறித்து ஆராய்வதற்காக இலங்கை வரும் இந்த அமெரிக்க உயரதிகாரி யாழ்.குடாநாட்டுக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அவதானிக்க இருப்பதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரக் கிளையில் இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளுக்கான அலுவலகத்தின் உதவி பணிப்பாளரான (10 ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரத்தின் சில்லில் சிக்கிய இளைஞன் மரணம்!

(கிளிநொச்சி)

உழவு இயந்திரத்திலிருந்து தவறிவீழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் முறிகண்டி - ஏ9 வீதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

முறிகண்டிப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரத்தின் பெட்டியிலிருந்து மேற்படி இளைஞர் முன்பகுதிக்கு செல்ல முயன்றவேளை நிலை தடுமாறி நிலத்தில் வீழ்ந்தார். அப்போது உழவு இயத்திரத்தின் சக்கரம் ஏறி படுகாயமடைந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## தொகுதி அமைப்பாளர்களுக்கு சந்திரிகா தலைமையில் கூட்டம்

(கொழும்பு)

தற்போதைய நாட்டு நிலைமை மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தான் நடத்திய பேச்சின் விபரங்கள் என்பவற்றை அறிவிப்பதற்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கான கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இக்கூட்டம் இன்று மாலை 2 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.(01)

## விசேட பயிற்சி பெற்ற துருப்புக்களின் அணிவகுப்பு நிகழ்வு பலாலியில்!



(யாழ்ப்பாணம்)

நான்கு மாதகால விசேட காலாட்படை நடவடிக்கை பயற்சிநெறியைப் பூர்த்திசெய்த படையினரின் அணிவகுப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் பலாலி விமானப் படைத்தளத்தில் இடம்பெற்றது.

மின்னேரியா, மாதுறு ஓயா, தியத்தலாவ, குடாஓயா மற்றும் பலாலி ஆகிய இடங்களில் இந்த விசேட பயிற்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்தப் பயிற்சிநெறியில் பயிற்சிபெற்ற படையின் பல்வேறு இராணுவ படைப் பிரிவுகளிலும் இருந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதானம் பல பாகங்களின் சித்திரம் என்கிறார் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது என்பது பாகங்கள் பலவற்றை ஒன்றிணைத்துச செய்யப்படுகின்ற சித்திரம் போன்றதெனத் தெரிவித்தார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தில் - முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான உறவைக் குறிப்பது ஒரு பாகம். இந்தப் பாகத்தை எடுத்து அந்தச் சித்திரத்தில் இணைக்க வேண்டும்.

ஒருநாள் எல்லாப் பாகங்களும் சித்திரத்தில் இடம்பெறும். அந்தச் சித்திரத்திற்கு சமாதானம் என்று பெயர் வருமெனவும் அவர் தெரிவித்தார்.




# பாதுகாப்பு அமைச்சை மீளளிக்குமாறு ஜனாதிபதியிடம் பிரதமர் கோரவில்லை!

## ஆனாலும் சமாதான முன்னெடுப்புக்கு அவசியம் என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சை மீளவும் அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி சந்திரிகாவுடனான சந்திப்பினபோது பிரத மர் ரணில் விக்கிரமசிங்க கோரவில்லை.

ஆனால், சமாதான முன்னெடுப்பில் பாதுகாப்பு அமைச்சின் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதிக்கு அவர் விளக்கமளித்தார் என, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஜீ .எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, சமாதான முன்னெடுப்பில் பாதுகாப்பு அமைச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி பலகல்ல சென்னைக்கு விஜயம்!

(சென்னை)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல தனது நான்கு நாள் இந்தியப் பயணத்தின் இறுதியாக சென்னைக்குச் சென்றுள்ளார்.

இந்திய இராணுவத்தின் சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா, கேரளா, கோவா பிராந்திய கட்டளை அதிகாரி (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# மனித உரிமைகள் தினம் நாளை அனுஷ்டிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நடத்தும் நிகழ்வுகள் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் - பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராஜாவும், கௌரவ விருந்தினராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஹேமா சிறிவர்த்தனவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி, முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வடங்கப்படவுள்ளன.

பரிசு பெறுவோர் பெயர் விபரம் வருமாறு -

***வினாவிடைப் போட்டி***

கி.குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), பி.வாசுகி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), கே.அபிமாறன் (யா/உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி)

***கவிதைப் போட்டி***

முதலாமிடம் - அபிராமி நல்லதம்பி (வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி), வ.யோகானந்தசிவம் (வட்டுக்கோட்டை)

இரண்டாமிடம் - வ.கோவிந்தபிள்ளை (கந்தர்மடம்), எமிலியான் இராசநாயகம் லுமின்கொன்சேகா (பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலை),

மூன்றாமிடம் - ச.கமல்ராஜ் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஜெ.ஹர்சினி (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ந.ஞீநாகபூசணி (கொக்குவில்).

அத்துடன் பட்டிமன்றத்தின் இறுதிச்சுற்றுக்கு யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளும் தெரிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# ஊழியர் நம்பிக்கை நிதியம் கொடுப்பனவில் முறைகேடு

## மனித உரிமை ஆணையகத்தில் முறைப்பாடு

ஊழியர் நம்பிக்கை நிதியம் வழங்கப்படாமலே அதனைப் பெற்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டிவீதி, கச்சேரியைச் சேர்ந்த அன்ரன் றொபேட் என்பவரே இந்த முறைப்பாட்டை தெரிவித்தார். இது குறித்துத் தெரியவருவதாவது-

வடபிராந்திய போக்குவரத்துச் சேவையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர், கடந்த வருடம் டிசம்பர் மாதம் தனது ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவினை தந்துதவுமாறு கேட்டு, மத்திய வங்கிக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

எனினும், அங்கிருந்து வந்துள்ள பதில் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இவர் அந்த நிதியை பெறாமலே அதனைப் பெற்றுவிட்டதாகத் தெரிவித்து அவரது ஆவணங்கள் மற்றும் உடமைகள் என்பன திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

இதையடுத்து தனக்குரிய கொடுப்பனவை மத்திய வங்கியில் இருந்து பெற்றுத்தருமாறுகோரி யாழ் மனித உரிமைகள் அலுவலகத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

# ஓட்டோ தடம்புரண்டு சாரதி படுகாயம்

ஓட்டோ தடம்புரண்டு கடலில் விழுந்ததில் அதன் சாரதி படுகாயம் அடைந்தார்.

மண்டைதீவுப் பகுதியில் -நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வெ.மாணிக்கம் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மண்டைதீவுப் பகுதிக்கு அண்மையாக, தனக்குச் சொந்தமான ஓட்டோவில் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த சமயம், வான் ஒன்றை விலத்த முற்பட்டவேளை யிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஓட்டோவில் பயணம்செய்த ஏனையவர்கள் எதுவித ஆபத்துக்களுமின்றி தப்பித்துக் கொண்டனர்.

# எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த அரையிறுதி உதைபந்தாட்ட போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

வெற்றிக்கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும், நாளைமறுதினமும யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மாலை 7.00 மணிக்கு மின்னொளியில் ஆரம்பமாகவுள்ளன.

இன்று சென்மேரிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகமும், யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து சென்நீக்கலஸ் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன.

நாளை மூன்றாம் இடத்திற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன. நாளை மறுதினம் இறுதிப் போட்டிகள் நடைபெறும். இறுதிப் போட்டிகளுக்கு முன்பு காட்சிப் போட்டிகளாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணியினை எதிர்த்து- பிரபல்யமான உதைபந்தாட்ட அணி மோதவுள்ளது என, யாழ். மாவட்ட விளையாடடுத் துறை தெரிவித்துள்ளது.

# மருத்துவபீட மாணவர் போராட்டம் பல்கலை நிர்வாகத்துக்கு எதிரானதே!

## மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மருத்துவபீட 20 ஆம் அணி மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பகிஷ்கரிப்பு போராட்டம், யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிரான போராட்டமெனன, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் குணானந்தம், சத்திரசிகிச்சை பேராசிரியராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து - யாழ். பல்கலைக்கழக சத்திரசிகிச்சை நிபுணர்கள் தமது கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளை நிறுத்தியுள்ளனர். எனவே, மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் அனைவரினதும் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு சுமுகமான தீர்வினைப் பெறுவதற்கு, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் யாழ் மருத்துவ பீடாதிபதி, மருத்துவ பீட அவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்து வைத்திய நிபுணர்கள் கலந்துகொள்ளும் கூட்டமொன்றை ஒழுங்கு செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியே எமது பகிஷ்கரிப்புப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்டதென்று, மருத்துவபீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித் மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
GET GARTER
(சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையின்
யாழ். மாவட்ட பிரிவு நடாத்திவரும்
உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம் : ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - சுன்னாகம்
அரையிறுதி, இறுதி போட்டிகள் - மின்னொளியில் இடம்பெறும்

அரையிறுதியில் மோதும் அணிகள் :

| | | |
|---|---|---|
| நாவாந்துறை சென்மேரிஸ் எதிர் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம். | 12.12.2003 (இன்று) இரவு 7.00 மணிக்கு | நாவாந்துறை சென் நீக்கிலஸ் எதிர் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம். |
| 3 ஆம் இடத்திற்கான ஆட்டமும் | 13.12.2003 (நாளை) இரவு 7.00 மணிக்கு | காட்சி ஆட்டமும் |
| இறுதி ஆட்டமும் | 14.12.2003 (ஞாயிற்றுக்கிழமை) | பரிசளிப்பு விழாவும் |

மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணிக்கும் வலிகாமம் லீக் தெரிவு அணிக்குமான
உதைபந்தாட்டமும் இடம்பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி-1882)

தமிழீழ விளையாட்டுத் துறை, யாழ். மாவட்டம்

# வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கும் அபிவிருத்தி நடவடிக்கையில் சமவுரிமை

## அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்

இனவேறுபாடுகளற்ற முறையில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்குச் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் சமஉரிமை உண்டு. இதற்கான நடவடிக்கையினை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு - கிழக்கு உட்பட்ட சகல பகுதிகளிலும் வாழும் மக்களிற்கான உரிமைகளை மதிததே எனது அமைச்சு செயற்பட்டுவருகினறது.

எமது அரசாங்கம் வடக்கு - கிழக்குப் பகுதிக்கான மக்களிற்கு சகல அபிவிருத்தி நடவடிக்கைகையும் செய்துகொடுக்கத் திட்டமிட்டுள்ளது. எந்தவித அச்சத்தையும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி விடயத்தில் அடையத்தேவையில்லை.

இலங்கையை - உலக நாடுகளுடன் தொடர்புபடுத்தக்கூடியவகையில், எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு இடையூறாகச் செயற்படுவோர், அதனை நிறுத்துதல் வேண்டும்.

நுகர்வோர் மற்றும் வர்த்தகர்கள் பாதிப்படைவதைத் தவிர்ப்பதே எனது அமைச்சின் பிரதான நோக்கமாகும்.

விவசாய உற்பத்திகளை அதிகரித்து, விவசாயிகளின் நலன்களைப் பேணக்கூடியவகையில், தேசிய கொள்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலத்திரனியல் வாக்களிப்பு முறை இலங்கையிலும் அறிமுகமாகும்

## தேர்தல் மறுசீரமைப்புக் குழு தீர்மானம்

இலத்திரனியல் முறையில் வாக்களிக்கும் முறையை அறிமுகப்படுத்த இலங்கைத் தேர்தல் மறுசீரமைப்புச் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இந்த செயற்பாடுகள் குறித்து இம்மாதம் 16 ஆம் திகதி பரீட்சித்துப் பார்க்கப்படவிருப்பதாக தேர்தல் மறுசீரமைப்புச் செயற்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்திய நிறுவனமொன்று வழங்கிய ஆலோசனைக்கமையவே இந்த முறை அறிமுகப்படுத்தப்பட இருப்பதாகவும், இந்தியாவில் இந்த முறையே தற்போது தேர்தல்களில் பின்பற்றப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

இந்த முறை மூலம் தேர்தல்களின்போது இடம்பெறக்கூடிய பல முறைகேடுகளைத் தவிர்க்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களில் பலர் இந்த இயந்திரத்தின் மூலமான வாக்களிப்பினை விரும்புவதாகவும், தேர்தல் மறுசீரமைப்பில் இது ஓர் முக்கிய விடயமாகக் கருதப்படுவதாகவும்

தேர்தல் மறுசீரமைப்பு குழுவால் தயாரிக்கப்படும் நகல் சட்டமூலம் அடுத்த ஆண்டு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# தொண்டர் படைத் தளபதியாக சரத் பொன்சேகா பதவியேற்பு



இராணுவத் தொண்டர் படைப்பிரிவுகளின் கட்டளைத்தளபதியாக - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த திங்கட்கிழமை பதவி ஏற்றுக் கொண்டார்.

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படைகளின் கட்டளை அதிகாரியாக இருந்த, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா - கடந்தமாத இறுதியில் தொண்டர் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது கடமையைப் பொறுப்பேற்க - தொண்டர்படைத் தலைமையகத்துக்கு சென்றபோது, தொண்டர்படை பிரதிக் கட்டளை அதிகாரி, மேஜர் ஜெனரல் சாலிய குலதுங்க - சிரேஷ்ட படைஅதிகாரிகளை அறிமுகம் செய்துவைத்தார்.

இதனையடுத்து, படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா - பௌத்த மதச்சடங்குகளை அடுத்து தமது புதிய அலுவலகத்தில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தொண்டர் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன - பிரதி இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதையடுத்தே, சரத் பொன்சேகா இந்தப்பதவியில் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மகாஓயாவில் புலிகளின் பதுங்குகுழியை 20 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றவேண்டும்

## ஜனாதிபதிக்கு சிஹல உறுமய காலக்கெடு

(அம்பாறை)

அம்பாறை மகாஓயா பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக விடுதலைப் புலிகள் பதுங்கு குழியை அமைப்பதை எதிர்வரும் இருபதாம் திகதிக்கு முன்னர் நிறுத்துவதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு சிஹல உறுமய, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பிரசார செயலாளரான உதய கம்மன்பில இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் - ஜனாதிபதியின் கீழ் பாதுகாப்பு அமைச்சு இருக்கும்போதே விடுதலைப்புலிகள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோது ஜனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சு இருப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா தனது அரசியல் கொள்கையை தொடர்வதாக இருந்தால், அது ஐக்கிய தேசிய முன்னணியின் பலவீனமான கொள்கையை பின்பற்றுவதாக அமையும்.

வடக்கு - கிழக்கினை பாதுகாப்பதற்காக, எதிர்வரும் 20 ஆம் திகதி சிங்கள மக்களை விழிப்படையச் செய்வதற்காக 'சிங்க உதானய' என்னும் திட்டத்தை மக்கள் மத்தியில் சிஹல உறுமய நடைமுறைப்படுத்தவுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவினால் விடுதலைப்புலிகளின் இந்த புதிய நடவடிக்கையை தடுத்து நிறுத்த முடியவில்லையாயின், அதற்கு எதிராக எம்மால் மிகப பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனவும் கம்மன்பில எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கீழ், பாதுகாப்பு அமைச்சு இருந்தபோது, விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாகத் தெரிவித்த பலர் இன்று அது குறித்து கண் தெரியாதவர்களாகவும், காது கேளாதவர்களாகவும் உள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகாவும் விடுதலைப்புலிகள் தொடர்பான மென்மையான அணுகுமுறையை கடைப்பிடிப்பதாலேயே, அவர்கள் யுத்த நிறுத்தத்தை மீறும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர், ரணில் தலைமையிலான அரசாங்கமும், விடுதலைப்புலிகள் தொடர்பில், மென்மையான அணுகு முறையை தொடர்ந்தும் கடைப்பிடித்தால் அம்பாறையில் உள்ள மகாஓயாவும், திருகோணமலையின் மணலாசன்குளம்போல ஆகிவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை மகாஓயாப் பகுதியில் விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டுவரும் பதுங்கு குழி தொடர்பாக தமக்கு எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என படைத்தரப்பின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பதினாறு நிபுணர்கள் ஜேர்மனிக்குப் பயணம்

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான 16 பேர் கொண்ட அரச மற்றும் தனியார்துறை நிபுணர்கள்- ஜேர்மனியில் நடைபெறவுள்ள கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கமும், மனித வள அபிவிருத்தியும் என்ற தலைப்பில் இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை, ஜேர்மனியின் மன்ஹெய்ம் நகரில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காகவே, ஜனாதிபதியின் செயலாளர் கருணாரத்ன தலைமையிலான 16 நிபுணர்கள் நேற்று ஜேர்மனிக்குப் பயணமாகினர்.

இலங்கையில் இருந்து செல்லும் இந்தக்குழுவில் அமைச்சுக்களின்- செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், தனியார்துறை நிறைவேற்று அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கை சர்வதேச அபிவிருத்திக்கான ஜேர்மன் பவுண்டேசன் அமைப்பு ஏற்பாடுசெய்துள்ளது.

# மனித உரிமை தொடர்பான கல்வி பாடத்திட்டமாக உருவாக வேண்டும்!

## உயர்நீதிமன்ற நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான கற்கைநெறி பாடசாலைக் கல்வித் திட்டத்தில் உள்ளடககப்படவேண்டும்.

இவ்வாறு உயர்நீதிமன்ற நீதியரசர் பெர்னாண்டோ யோசனை ஒன்றை முன்மொழிந்துள்ளார்.

மனித உரிமைகளுக்கான கேந்திர நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

மனித உரிமைகள் தொடர்பான பாடத்திட்டமானது, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திற்கான பாடத்திட்டத்தில் உடனடியாக உள்ளடக்கப்படவேண்டும். ஏனெனில், இதன்மூலமே அதிகளவானோருக்கு மனித உரிமை அறிவை பெற்றுக் கொடுக்கமுடியும்.

மனித உரிமை அறிவு - கல்விப் பொதுத் தராதரச் சாதாரண பரீட்சையில் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டால், பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் மாணவர்கள் இந்த விடயத்தினைக் கற்கநேரிடும். இதேவேளை பாடசாலை ஆசிரியர்களுக்கும் மனித உரிமை சம்பந்தமான அறிவினை ஏற்படுத்தவேண்டும். அவர்கள் மத்தியில் மனித உரிமை தொடர்பாக தெளிவினையும் ஏற்படுத்த வேண்டும்.

மனித உரிமையைப் போதிக்கும் பாரிய பொறுப்பு பாடசாலை ஆசிரியர்களிடம் சுமத்தப்பட்டுள்ளது. பாடசாலை ஆசிரியர்கள் - மனித உரிமைகள் சம்பந்தமாக தெளிவுபடுத்தமுடியுமாயின் அவர்கள் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு மனித உரிமை விடயங்களை புகட்ட முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)



தொண்டர் படைகளின் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு, தொண்டர் படைத்தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்படுகிறது

## களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெறும்

# மருத்துவ சேவை இடைநிறுத்தம்; தமிழ்க்கைதிகள் பாதிப்பு!

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொழும்பு குடும்ப புனர்வாழ்வு நிலையம் பல்வேறு மனிதாபிமானப் பணிகளோடு பல்வேறு மருத்துவ சேவைகளையும் வழங்கி வந்தது. கடந்த இரண்டரை வருடங்களாக இடம் பெற்று வந்த சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது குறித்து தமிழ் அரசியற் கைதிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

மாதாமாதம் ஒழுங்காக வந்து மருத்துவ சிகிச்சையை வழங்கி வந்த குடும்ப புனர்வாழ்வு நிலையம் நவம்பர் மாதம் முதல் தமது மனிதாபிமான பணிகளை இடைநிறுத்தியிருப்பதாகவும் இதனால் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் சித்திரவதை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஒழுங்காக உரிய மருந்துவகைகளைப் பெற்று நிவாரணம் பெற்ற தமிழ் அரசியற்கைதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள.

களுத்துறைசிறைச்சாலை வைத்தியசாலையில் உரிய மருந்துவகைகள் கையிருப்பில் இல்லை. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். மனித உரிமை ஆர்வலர்கள் குடும்ப புனர்வாழ்வு நிலையத்துடன் தொடர்பு கொண்டு மனிதாபிமானப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள ஆவன செய்யுமாறு தமிழ் அரசியற் கைதிகள் கோரியுள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸில் மீள இணைந்த பிரதி அமைச்சர் மொகிதீன் அப்துல் காதர்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று அதாவுல்லா அணியில் இணைந்திருந்த கடற்றொழில் நீரியல்வள பிரதி அமைச்சர் மொகதீன் அப்துல் காதர், மீண்டும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்துள்ளார்.

கல்குடாவைச் சேர்ந்த தனது ஆதரவாளர்கள் சகிதம் நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அலுவலகத்திற்குச் சென்ற பிரதி அமைச்சர் மொகதீன் அப்துல் காதர், மீளவும் அந்தக் கட்சியில் இணைவதாக அறிவித்தார்.

அதாவுல்லா அணியில் இருந்து மீளவும் முஸ்லிம் காங்கிரஸில் இணையும் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் இவராவார். ஏற்கனவே வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூட் மீளவும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்திருந்தார்.

# நேர்முகப் பரீட்சை

(சாவகச்சேரி)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்டுவரும் மகளிர் அபிவிருத்தி நிலைய பயிற்சி வகுப்பிற்கு புதிய பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை, எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக, கிராமிய அபிவிருத்திப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# யாழ்.மோட்டார் திணைக்களத்தில் இரு நாட்களுக்கு விசேடசேவை

## உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தகவல்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள - யாழ்.அலுவலகத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ள விசேட சேவையின் மூலம், சாரதி அனுமதிப்பத்திரங்கள், இலக்கத்தகடுகள், வாகன உறுதிச் சான்றுகளைப்பெற்றுக் கொள்ளுமாறு - யாழ்.மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால், கடந்த மாதம் நடத்தப்பட்ட விசேட நடமாடும் சேவை மூலம் பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான முடிவுகள், உரியவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதுடன், சாரதி அனுமதி அட்டைகள், வாகனங்களுக்கான உறுதிப்பத்திரங்கள் முதலானவையும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, மோட்டார் சைக்கிளுக்கான - NPGA முதல் NPGZ வரையான இலக்கத்தகடுகள் இரண்டாயிரமும் வழங்கப்படவுள்ளன.

நாளையும், நாளை மறுதினமும் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை இதனைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும்,

ஐயாயிரம் வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களும், ஆயிரத்து 700 வாகனப் பதிவுச்சான்றிதழ்களும் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 497 பேரின் சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பாக, சில சிக்கல்கள் தோன்றியிருப்பதால் உரியவர்களைத் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறும், இவை மோசடிகள் என்றுகூறும் அளவிற்கு பாரிய பிரச்சனைகள் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# லங்கா சீமெந்து கூட்டுத்தாபன வருடாந்த பொதுக் கூட்டம்!

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவனக் கிளைச் சங்கத்தின் - விசேட பொதுக் கூட்டம் நாளைமறுதினம் காலை 10 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட பொதுக்கூட்டத்தில் - சுயவிருப்பத்தில் ஓய்வுபெறும் திட்டத்தில் விண்ணப்பிக்காத, வயது வந்து சேவையில் ஓய்வுபெற்ற, சேவையில் இருந்து விலகிய, சேவையிலிருந்து தாமாக விலகியதாக கருதப்பட்ட, இறந்தவர்கள் மற்றும் சேவை நிலையத்தில் உள்ளவர்கள் உட்பட அனைத்துத் தொழிலாளர்களின் சம்பள நிலுவை பெறுவது சம்பந்தமாக, 330 தொழிலாளர்களின் கையொப்பத்துடன், பதினொரு கோரிக்கைகளுடன் தொழில் ஆணையாளர் நாயகத்திடம் முறையிடப்பட்டது தொடர்பாக, எமது தொழிற்சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், தற்போது இம்முறைப்பாட்டுக்கான விசாரணைப் பெறுபேறுகள் தொடர்பான பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதென, சமெந்து நிறுவனக் கிளைச சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## ஆன்மீக சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் - யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடாத்தும், ஆன்மீகச் சொற்பொழிவு - இன்று பிற்பகல் 5.30 மணிக்கு சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் "வள்ளலார் வாக்கும் வாழ்வும்" எனும் தலைப்பில், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் - மா.வேதநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## கொடிதினம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கொடிதினம் - இம்மாதம் 3 ஆம் திகதி முதல ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'வளர்கலை திங்கள்' எனும் தொனிப்பொருளில் - எதிர்வரும் 20 ஆம் திகதிவரை கொடிதினம் அனுஷ்டிக்கப்படும்.

## நெடுந்தீவில் ஒளிவிழா நிகழ்வுகள்

தென்னிந்திய திருச்சபையின் கீழ் இயங்கும் நெடுந்தீவு பகல் பராமரிப்புநிலைய சிறார்களின் ஒளிவிழா நிகழ்வுகள் - நாளை சனிக்கிழமை மாலை 2 மணிக்கு, நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு நுவரெலியா குருமுதல்வர் அருட்திரு கலாநிதி டி.எஸ்.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை, நெடுந்தீவு மேற்கு பகற்பராமரிப்பு நிலையத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் - நாளை காலை 9 மணிக்கு நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபை யாழ்.பேராயர் பேரருள் கலாநிதி எஸ்.ஜெபநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் - சிறார்களின் கலைநிகழ்வுகளும், கண்கவர் வண்ணங்களில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## மாநாடு ஒத்திவைப்பு

பல.நோ.கூ. சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்களுக்கான மாநாடு பிற்போடப்பட்டுள்ளது.

நேற்று நடைபெறவிருந்த பல.நோ.கூ. சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்களுக்கான மாநாடு தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது. இந்த மாநாடு - எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## வீடியோப் படக்காட்சி

யாழ் - பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித தொடரில், உலகப்புகழ்பெற்ற வங்காள நெறியாளர் 'மிரினாள் சென்' உருவாக்கிய 'ஏக்தின் அச்சனக்' என்ற வங்காளமொழித் திரைப்படம், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணிக்குப் புவியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

## தனக்குத்தானே தீ மூட்டி குடும்பஸ்தர் தற்கொலை

மிதிவெடியால் காலை இழந்து, வறுமையில் வாடிய குடும்பஸ்தர் ஒருவர், தனக்குத்தானே மண்ணெய் ஊற்றி தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான கு.ஈஸ்வரன் (வயது 30) என்பவரே இவ்வாறு மரணமானார். கடந்த செவ்வாய் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து, பொலிஸாரின் விசாரணைகளையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (111)

# நெடுந்தீவுக்கான பயணிகள் படகு பழுது போக்குவரத்து பாதிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கான கடற் போக்குவரத்தில் ஈடுபட்டுவந்த, சமுத்திரதேவா படகு பழுதடைந்து பயணிகள் சேவையில் ஈடுபடாமல் உள்ளது. குமுதினிப்படகு பழுதடைந்த பின்பு, நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான இரு படகுகளே மாறிமாறி சேவையில் ஈடுபட்டு வந்தன.

தற்போது அதில் ஒரு படகு பழுதடைந்தமையால், மற்றைய படகான உதயதாரகையே இன்று கைகொடுத்துவருகின்றது.

காலநிலை சீரின்மையால், கடல் கொந்தளிப்பாக உள்ளது. இதன் காரணமாக, சேவையில் ஈடுபடும் இந்த ஒரு படகும் பழுதடைந்ததால், நெடுநதீவுக்கான போக்குவரத்தில் பெரும் நெருக்கடி ஏற்படவாய்ப்புள்ளது.

சமுத்திரதேவா படகின் இயந்திரம், அடிக்கடி பழுதடைவதனால் அதற்குப் புதிய ஒரு இயந்திரம் பொருத்துவதற்கான பொதுச்சபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (113)

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனளிக்காது மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த போ.சிறில் அப்பு என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 27 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்றவேளை விபத்துக்குள்ளாகி, படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இவர், சிசிக்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார். (111)

# கடும் மழையினால் 165 குடும்பம் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கண்டாவளைப் பகுதியில், கடந்தவாரம் பெய்த அடைமழை காரணமாக, 165 குடும்பங்கள் இருப்பிடவசதியின்றி, அவதிப்படுவதாகக் கண்டாவளை பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இவ்வாறு இருப்பிடவசதி அற்றோரில், ஐந்து குடும்பங்களின் வீடுகள் முற்றாக அழிந்தநிலையில் காணப்படுவதாகவும், ஏனைய வீடுகளினுள் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் பொதுஇடங்களுக்கும், உறவினர் வீடுகளுக்கும் சென்று தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதுமலை தெற்கு வறிய மக்களுக்கு மலசல கூடங்கள் அமைக்க உதவி

## இந்துகலாசார அமைச்சு நடவடிக்கை

(சுதுமலை)

சுதுமலை தெற்கு - யுவசக்தி சனசமூக நிலையத்திற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 40 குடும்பங்களுக்கு, மலசலகூடம் அமைப்பதற்கான செலவை - இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் வழங்கியுள்ளார்.

இந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், முதற்கட்டமாக 40 குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைப்பதற்கு என 320 சீமெந்துப்பைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைக் கொண்டு ஒவ்வொரு குடும்பமும் மலசலகூடத்தின் கட்டடத்தை அமைத்து முடிக்கவேண்டும். இவ்வாறு முடிந்த்தவர்களுக்கு பேசின், மற்றும் கூரைத்தகடுகள் என்பவையும் வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மூவிமென்டோ நிறுவனத்தினரால், சண்டிலிப்பாய் பிரதேச பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறிய குடும்பங்களுக்கு 30 மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் தமக்கு வேண்டிய மலசலகூடத்திறகான குழியினை அமைத்தல்வேண்டும். அவ்வாறு அமைத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது. (44)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : பு.புவனேஸ்வரி.
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

மூன்றாவது அகவையில்



பெயர் : வி.துசிந்தா
முகவரி : அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

நான்காவது அகவையில்





பெயர் : கு.கம்சாயினி
முகவரி : முடிப்பிள்ளையார் கோவிலடி, வேலணை மேற்கு.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ச.தஜீவனி
முகவரி : மதவடி வீதி, கோண்டாவில் கிழக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------------
முகவரி :------------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------
பெற்றோர் ஒப்பம்

# சீதனம்



(சென்றவாரத்தொடர்ச்சி....)

வயது 30 ஆகிறது. வீட்டில் கல்யாண வயசில் மூன்று சகோதரிகள். நான் என்ன செய்வது. இன்றுவரை நான் உழைத்து ஏதுமில்லை. எல்லாம் வீட்டில் வாங்கியது தான். இனி அந்த சகோதரிகளைக் கரை சேர்க்க நான் சீதனம் வாங்கத்தானே வேண்டும். கொஞ்சமும் இரக்கமில்லாமல் கதை யாக்கின்றீர்களே. அப்படியானால் நீங்கள் எனது சகோதரிகளைக் கரை சேருங்கள். நான் சீதனம் வாங்கவில்லை.'' போட்டாரே ஒரு போடு (இது என்னடா ஒரு புதுச்சிக் கல்). சரி சரி அமைதி என்று குரல் கொடுத்தேன்.

அப்போது கூட்டத்தின் மூலைப்பக்கத்தில் இருந்த ஒருவர் எழுந்து "நான் என்ன செய்ய, எனக்கு சீதனம் வாங்காமல்விட விருப்பம்தான். ஆனால், என் அம்மாவும், அப்பாவும் பிடிவாதமாய் இருக்கின்றனர். வாங்காமல் விட்டால், தற்கொலை செய்யப்போவதாய் மிரட்டுகினம்'' என்றார் தொங்கிய முகத்துடன். அந்தவேளையில், அங்கு இன்னும் ஒரு கூட்டம் கையில் வீச்சரிவாளர்களோடு. "யாரடா அவன் என்ர பொடியனைச் சீதனம் வாங்கவேண்டாம் என்று சொன்னவன்'' என்று பாய்ந்து வந்து கொண்டிருந்தார் ஒரு பெரியவர் கையில் வாளுடன். பிறகென்ன நான் விவேக்கின் பாணியில் எஸ்கேப் (தப்பிவிட்டேன்).

வெள்ளைக்காரனிடம் நாம் பெற்றுக் கொண்டவற்றில் நல்லவைகள் மிகக்குறைவே. உண்மையில் பெரிய விஞ்ஞானிகள் எல்லோரும் வெள்ளைக்காரர்கள்தான். அவர்கள் சீதனம் கேட்டா திருமணம் செய்தார்கள். மிகவும் எளிமையாகவல்லவா வாழ்ந்தார்கள். அவர்கள் கேட்டிருந்தால் - சந்தை நிலவரம் எவ்வளவாக இருந்திருக்கும் எனக் கற்பனை செய்து பார்த்தால், தலை சுற்றுகின்றதல்லவா?

இந்தியாவிலும், இலங்கையிலும்தான் இந்த சீதனத்தின் தாக்கம் அதிகம் எனலாம். மேலும் தமிழர்கள் பெரும்பாலான தொகையில் வாழும் நாடுகளில், அவர்களிடையிலும் இது காணப்படுகின்றது. சிங்களவர்கள், முஸ்லிம்கள் மத்தியில் இது பெரியதாக்கம் தருமளவில் இல்லை. ஆயினும், தமிழர்களிடையேதான் இது பெரியளவில் பரவி இருக்கிறது.

நான் முன்சொன்னவாறு இது ஒரு சுற்று வட்டத்தில்தான் இருக்கிறது. ஓரிடத்தில் சீதனம் வழங்கப்படுகிறது. அந்தச்சீதனம் பகுதியாகவோ, முழுமையாகவோ இன்னும் ஒரு இடத்துக்கு வழங்கப்படுகிறது. மொத்தத்தில் கூட்டிக்கழித்துப் பார்த்தால், ஒரு குறித்த தொகைப்பணம் கைமாறிக்கொண்டிருக்கின்றது. இது எந்தவித சிரமமும் இன்றி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்க, பக்கவிளைவுகளாக இடையில் சில நபர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எந்த இயக்கமும் சீராக இருக்க வேண்டும் என்பதில்லைத்தானே. ஒருவர் வாங்குகிறார். அவரிடம் வாங்க இன்னுமொருவர் தயாராக இருக்கிறார். அவரிடம் வாங்க இன்னும் ஒருவர் இருக்கிறார்.

இந்தச் சுழற்சிப்பரிமாற்றத்தைக் குழப்ப ஒருசிலர் இருப்பார்கள். (அவர்கள் தான் உறவுகள் இல்லாதவர்கள், இவர்கள் இந்த சீதனத்தில் குளிர்காய்கின்றவர்கள். அதனை தமக்குச் சாதமாக்கி பிழைக்கத் தெரிந்தவர்கள்?) இவர்களைவிட வேறு காரணங்களும் இந்த சுழற்சி பரிமாற்றத்தினைச் சிக்கலுக்குள்ளாக்கி, சிலர் பாதிக்கக் காரணமாயிருக்கின்றன. அவை குடும்பத்தில் சீதனத்தின் தேவையுடன் உள்ளவர்களின் எண்ணிக்கை, சீதனத்தின் சந்தைப் பெறுமதிகள் (தொழில்களுக்கு ஏற்பமாறுபடும்) இந்த சிக்கலான செயற்பாடுகளுடன்கூடிய இந்த சீதனக் கொடுமையினை நிறுத்தமுடியுமா? முடியும் மனமுண்டானால் இடமுண்டு. எல்லோரும் ஒரேநேரத்தில் சீதனம் வாங்குவதையும், வழங்குவதையும் நிறுத்திக்கொண்டால், தீர்வு கிடைக்காதா? ஏன் ஒருவரை ஒருவர் சாடிக் கொண்டிருக்கவேண்டும்? குளிர்காயவேண்டிய, வாங்கவேண்டிய தேவைகள் இல்லாதபோது - இடர்ப்படவேண்டிய, வழங்க வேண்டிய தேவைகள் அற்றுப்போகும் தானே?

இறைவன் - மனிதனை வாயுடன், வயிற்றுடன் படைக்கும்போது - கால்களையும், கைகளையும் படைத்தான்தானே. ஏன் அவை மூலம் தேவையானதைப்பெற்று, வாய் வழி வயிற்றில கொட்டத்தானே. இதனைவிடுத்து, வாயமூலம் சீதனம் கேட்டு வாங்கி, வயிறறை வளர்த்துவைத்து - கையிலும், காலிலும் கனக்க கனக்க அணிகலன்போடவா - இறைவன் படைப்பை அர்த்தம்கொள்வது?

காதலிக்கும்போது, பெற்றவர்கள் எதிர்ப்பிருந்தால், காதலியைக் கூட்டிக்கொண்டு கண்மண் தெரியாமல் ஓடுவீர்கள். ஆனால், சீதனவிடயத்தில் பெற்றோர் வற்புறுத்தின், கொண்டவளையும் கொடுமைப்படுத்தத் தயங்கமாட்டீர்கள். இது எந்தவகையில் நியாயம். இங்கு காதலைப்பற்றி கதைக்கும்போது, ஒன்றைக் குறிப்பிடவேண்டும். சீதனத்தைச் சிதைத்து, வெற்றிகாணும் ஆயுதங்களில் - இது கூராயுதம் எனினும், அந்தக்காதலை தமது காமத்துக்கும், காரியங்களுக்கும் இரையாக்குபவர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மூலதனம் வேண்டுமா? கிடைப்பதனைக் கடனாகக் கருதி, அதனை திருப்பி கொடுப்பதை உறுதிப்படுத்தின், அது சீதனம் என்ற பெயரைப் பெறுவதைத் தடுக்கலாமல்லவா?

"சும்மா மாடு சொன்னால் கேட்கமாட்டார்கள். ஆனால், மணிகட்டின மாடு சொன்னால் கேட்பார்கள்'' இதுதான் மனித இயல்பு. ஈழத்தைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இதன் தாக்கம் வெகுவாகக் குறைந்துவருகிறது என்பதை மறுக்கமுடியாது. அதற்கு மேற்சொன்னகாரணம்தான். மேலதிகமாய் இருந்தால், எமக்குத் தாருங்கள் வீட்டுக்குதவாத சோம்பேறிகளை உருவாக்குவதை விடுத்து, நாட்டுக்குதவும் வீரர்களை உருவாக்குவதே சிறந்தது என்பது அவர்களது கண்டிப்பான வாதம். இதனை அவர்கள் இயன்றவரை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

போராட்டம் எமக்குத் தந்த பரிசுகளுடன் இந்த சீதனப்புரட்சி, பெண்மைப்புரட்சி, சாதிப்புரட்சியும் உள்ளடங்கும் என்பது ஆறுதலளிக்கும் உண்மை.

இவர்களுக்கும் அல்வா கொடுப்பவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தமது வேலையைத் தொடர்ந்துகொண்டு இருக்கிறார்கள். இவர்களுக்குக் காலம்தான் பதில்சொல்ல வேணடும். சீதனம் வாங்குவது நல்லது அல்ல எனப் புரிகிறது. ஆனால், நிறுத்த மனமிலலை அல்லது நிலைமை விடவில்லை. எந்த நல்லதையும் செய்ய ஒரு சில தியாகங்களை செய்யவேண்டும்தானே. ஒன்றைப்பெற ஒன்றை இழப்பது அவசியம்தான். அவர் வாங்கினவர்தானே, ஆனபடியால் நானும் வாங்கவேண்டும் எனச் சொல்வது தவறு. இதுபோன்ற விதண்டாவாதங்களால்தான் 'ராக்கிங்' இன்னும் தொடர்ந்து கொண்டிக்கின்றது. இன்னும், சீதனம் வாங்குவது குற்றம் எனினும், வசதியான இடத்தில் வாங்கலாம். தேவையிருந்தால் வாங்கலாம் என்றெல்லாம் புகைக்குண்டுகளை எறிவது அவ்வளவு நல்லதல்ல.

அது நிச்சயமாக இருந்தக் கொடுமையினை முன்னெடுத்துச் செல்பவர்களாக எம்மை இனங்காட்டுமே யன்றி, வேறொன்றுமில்லை. வெறுமனே குண்டக்கா மண்டக்கா விவாதங்களை ஓரங்கட்டிவிட்டு - இளைஞர்களே, யுவதிகளே, பெற்றோர்களே, பெரியோர்களே சீதனப் புரட்சியில் இன்றே இணைவோம்.

ஊரோடி

## சோம்பேறிகளின் வேதனம்



# இளமை தரும் தக்காளி

'நாள்தோறும் ஒரு அப்பிள் சாப்பிட்டால், மருத்துவர் தேவைப்படமாட்டார்' என்று சொல்லுவார்கள். ஆனால், எல்லோரும் வாங்கிச் சாப்பிடும் விலையிலா அப்பிள் விற்கிறது?

அதற்கு மாறாக 'ஏழைகள் அப்பிள்' இருக்கிறது. அதுதான் தக்காளிப்பழம்.

அப்பிள் பழத்திலுள்ள எல்லாச் சத்துக்களும் தக்காளியில் இருக்கிறது. ஆனால், தக்காளி விலைமலிவு. இதனால், தக்காளியை - 'ஏழைகளின் அப்பிள்' என்கிறார்கள்.

ஸ்பானிஷ் மொழியில் - தக்காளிக்கு 'மூர் அப்பிள்' என்று பெயர். இதற்கு ஏழைகளின் அப்பிள் என்று பொருள்.

இத்தாலியில் தக்காளியைத் 'தங்க அப்பிள்' என்கிறார்கள். காதல் மன்னர்களான பிரெஞ்சுக்காரர்கள் - தக்காளியை 'காதல் கனி' என்று விருப்பத்துடன் அழைக்கின்றார்கள். 'தள தள என்று இருப்பதால்- தமிழ் மக்கள் தக்காளி என்கிறார்கள்.

தககாளிப்பழம் சத்துக்கள் நிறைந்தது. தக்காளிக்குச் சிவப்பு நிறம் தனி அழகைக் கொடுக்கிறது 'செக்கச் சிவந்த தக்காளிபோல்' என்று சில பெண்களை வர்ணிக்கின்றார்கள்.

இந்தச் சிவப்பு நிறத்தில் புற்றுநோயைத் தடுக்கும் சக்தி இருக்கிறது.

நாள்தோறும் ஓரிரு தக்காளியை அப்படியே பச்சையாகச் சாப்பிடலாம். அல்லது ஒரு கோப்பை தக்காளிச்சாறு குடிக்கலாம்.

இது புற்றுநோய் வராமல்



தடுக்கும்.

தக்காளியில் சுண்ணாம்புச் சத்து அதிகமாக இருக்கிறது. இது எலும்பு, பற்களை உறுதிப்படுத்தும். வளரும் பிள்ளைகளுக்குத் தக்காளி மிகவும் நல்லது. நகம், பல் எலும்பு வளர்ச்சிக்கு உதவும். குழந்தைகளின் உயரத்தைக் கூட்டக்கூடிய வல்லமை தக்காளிக்கு உண்டு.

இதைவிட இரும்பு, சோடியம், மகனீசியம், பொட்டாசியம், பொஸ்பரஸ் சத்துக்களும் தக்காளியில் இருக்கின்றன.

உடல் வளர்ச்சிக்கும், நோய்த் தடுப்புக்கும் இந்தச் சத்துக்கள் உதவுகின்றன. இத்துடன், தக்காளியில் உயிர்ச சத்துக்களான எ, பி, சி ஆகியனவும் இருக்கினறன. கண்கள் பளபளப்பாக இருக்க இவை உதவும். இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி மாரடைப்பு வராமல் தடுக்கவும் இது உதவுகின்றது.

இந்தத் தக்காளிப்பழம் இளமையைத் தரக்கூடியது. தோலிலும், முகத்திலும் சுருக்கம் விழாமல் தடுக்கின்றது - மேனி பளபளப்பாக இருக்கவும் உதவுகின்றது.

சம்பார், இரசம் என்பவற்றிலிலும் தக்காளியைச் சேர்த்துக்கொள்கிறோம்.

தக்காளியை வெட்டி பச்சையாகவே சாப்பிடுகின்றோம். இதைவிட சூப், சோஸ, என்றும் பயன்படுத்துகிறோம்.

எப்படிப் பயன்படுத்தினாலும், தக்காளி பலனைத் தருகின்றது. ஆனால், தக்காளியைப் பச்சையாகச் சாப்பிடுவதுதான் அதிக பலன் தரும்.

நாள் தோறும் எப்போது வேண்டுமானாலும், தக்காளிப்பழம் சாப்பிடலாம்.

தக்காளிப்பழம் குளிர்ச்சியானது. இதனால், மூட்டுவலி ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உண்டு . அப்போது பச்சையாகச் சாப்பிடுவதை தவிர்த்து, சூப் வைத்து சாப்பிடலாம்.

நாள்தோறும் சாப்பிடுவதைத் தவிர்த்து இடைக்கிடையில் சாப்பிடலாம். இதுபாதிப்பை ஏற்படுத்தாது.

எனவே, ஏழைகளின் அப்பிளான தக்காளியைச் சாப்பிட்டுப் பயன் பெறுவோம்.

# பெற்றோர்களே உங்கள் செல்வங்களை ஐந்தில் வளையுங்கள்

**பெற்**றோர்களே, ஆசிரியர்களே பிள்ளைகளின் செயல்களில் தவறுகண்டு கண்டிக்கவும், தண்டிக்கவும் செய்கிறார்கள். ஆனால், காரணத்தை ஆராய்வதில்லை.



உணமையில் குழந்தைகள் பெற்றோரைப் பார்த்துத்தான் செயற்படுகின்றன.

4-6 வயதுக் கட்டத்திலுள்ள குழந்தைகள் - எது நல்லது, எது கெட்டது, எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானித்துவிடும். தங்களுடைய பெற்றோர் செய்கிற யாவும் சரி என்றே அவை நினைத்துவிடும். ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தையைத் திருத்தி, சரியான பாதையில் வழிநடத்துவது அவசியம். வீட்டைப் பொறுத்தவரை பெற்றோரும், பள்ளிக்கூடத்தில் ஆசிரியரும் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

அறிவுரைகளைவிட, உதாரணங்கள் அதிக தாக்கம் கொண்டது. நீங்கள் அன்றாட வாழ்க்கையில் எதைச் செய்கிறீர்களோ, அதையெல்லாம் குழந்தைகள் அப்படியே பின்பற்றும். ஆசிரியர்களைப்போலவும் நடித்துக்காட்டும். குறிப்பாக வளரும் பருவத்தில், அவர்களுக்குப் பிடித்தசெயல் இது. இதனை அவர்கள் நையாண்டி செய்வதில்லை. இவ்வித பாவனையில் ஓர் அலாதியான மகிழ்ச்சியை அவர்களால் பெறமுடிகிறது. பெரியவர்களைப் போல் தாங்களும் நடந்துகொள்ளுகிற விருப்பம். அதற்கான வயதை இன்னும் எட்டாமையால், நடிப்பில் இறங்கிவிடுவர்.

ஒரு குழந்தை தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை ஆசிரியர்களுடனும், பெற்றோர்களுடனும் கழிக்கின்றது (மற்றவர்களுடன் பழகும் நேரம் மிகக்குறைவு). எனவே, அவர்கள்தான் குழந்தையிடமுள்ள சிறப்பான அம்சங்களைக் கண்டறிந்து, வெளிக்கொணர வேண்டும். குழந்தையின் சக்தியை நெறிப்படுத்தவேண்டும். தேக, மனோரீதியான வளர்ச்சி சமநிலையில் அமைந்துவிட்டால், எதிர்காலத்தில் அந்தக் குழந்தை விவேகமுள்ள மனிதனாகிவிடும்.

ஒரு காரியத்தைத் திரும்பத்திரும்ப விளக்குதல் அல்லது செய்து காட்டுதல்மூலம், பழக்கமாகி விடலாம். நல்ல பழக்கங்களை அப்படித்தான் குழந்தையிடம் ஏற்படுத்தவேண்டும். சமூக, பண்பாட்டுரீதியான தகுதிகளை அவர்களுடைய மனதில் பதியவைக்கவேண்டும்.

குழந்தைகளின் ஆரம்ப காலகட்டத்தில், நாம் அவர்களுடைய தவறுகளை உடனுக்குடன் திருத்தத் தவறினால், அவர்கள் தவறான பாதையிலேயே தொடர்ந்து நடைபோடுவார்கள்.

நல்ல வசதியான வீட்டுப்பிள்ளை கூட, தன்னுடைய சக மாணவர்களின் பேனா - பென்சில் போன்றவற்றைத் திருடுவதை பழக்கமாகக் கொணடிருக்கும். பெண் குழந்தையும் இத்தகைய தவறைச் செய்யும் உணவு இடைவேளையின்போது, சக மாணவிகளின் பைகளைத் திறந்து பார்க்கும்.

குழந்தைகள் என்ன செய்யும். பொருட்களைத் தொலைத்த குழந்தைகள் - ஆசிரியரிடம் முறைப்பாடு செய்தால், ஆசிரியர் தவறு செய்கிற குழந்தையைக் கண்டுபிடித்துத் திருத்தவேண்டும்.

சில பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் செய்கை தவறானது என்பதை அறிந்திருந்தாலும், கண்டும் காணாமல் இருந்துவிடுவார்கள். குழந்தை திருடியதாக அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் அதனைக் குறும்புத்தனம் என்கின்ற அளவில்தான் பார்ப்பார்கள்.

ஆசிரியர் - சம்பந்தப்பட்ட பெற்றோரை அழைத்துப்பேசவேண்டும். 'நாளை ஒரு திருடன் உருவாக வழியமைத்துக் கொடுக்காதீர்கள்' என்று எச்சரிக்கவேணடும். ஒரு குழந்தையைத் திருத்துவதென்பது பெற்றோர், ஆசிரியர் கூட்டுமுயற்சியாகத்தான் இருக்கவேண்டும்.

சில குழந்தைகளின் மன உணர்ச்சி எளிதில் நொருங்கிவிடக் கூடும். அவர்களை, அடுத்தவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு பெற்றோர் அடிப்பதில் விபரீதமாகிவிடும்.

சில பெற்றோர் தங்களுடைய கோபத்துக்கு வடிகாலாகப் பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்துவார்கள். குழந்தைகளை அடிப்பதால்- விரும்பத்தகாத விளைவுகள்தான் ஏற்படுமேதவிர, எதிர்பார்க்கின்ற பலன் கிட்டாது.

சரியான நேரத்தில் குழந்தையைத் தண்டிக்காமல் இருப்பதும், அடிக்கடி தண்டிப்பதும் இரண்டுமே தவறுதான். சின்னச் சின்ன பிழைகளுக்கெல்லாம் தண்டிக்கப்படும் போது, குழந்தைக்குத் தண்டனை பற்றிய பயம் போய்விடும். தான் திருத்தவேண்டியதன் அவசியத்தை அது உணர்வதில்லை. அதேமாதிரி, தண்டிக்காமல்விட்டாலும் அந்தக் குழந்தை தவறின் தன்மையைப் பற்றியே கருதாமல், மீண்டும் அதே தவறரைச் செய்யும்.

தண்டனை என்றால் - உடல் ரீதியாகத் தண்டிக்கப்படவேண்டும் என்றில்லை. ரீ.வி. பார்ப்பதையோ, விளையாடச் செல்வதையோ, வெளியல், சுற்றுலா செல்வதையோ, வெளியில் செல்வதையோ தடைசெய்துவிடலாம். தண்டிக்கிறவிதம், குழந்தைகளுக்கிடையே வேறுபடும்.

மற்ற எல்லாமுறைகளும் பலனற்றுப்போகிறபோதுதான், உடல் ரீதியான தண்டனையை வைத்துக்கொள்ளவேண்டும். அதுவும், கடுமையாக இருக்கக்கூடாது.

குழந்தை செய்கிற ஒவ்வொரு நல்ல காரியத்துக்கும் பாராட்டலாம், பரிசளிக்கலாம். அது செய்கிற தவறு எத்தனை சிறியதாக இருப்பினும், திருத்தவேண்டும்.

குழந்தைக்கு அதிக சலுகை காட்டுவதோ, செல்லம் கொடுப்பதோகூடாது. குழந்தை மீது உங்களுக்குள்ள அன்பை அப்படித்தான் வெளிப்படுத்தவேண்டும் என்பதில்லை.

செல்லமாய் வளர்க்கப்படும் குழந்தைகள் - பிற்காலத்தில் சுயநலம் உள்ளவராகி விடுவார்கள்.

பெற்றோர்கள் மிகவும் கண்டிப்பாக நடந்தால், குழந்தைகள் வெளிப்படையாகவே வெறுப்பைக்காட்ட முனைந்துவிடுவார்கள்.

குழந்தைகளை நல்ல விதமாக உருவாக்குவதில், வளர்ப்பதில் ஆசிரியர் பங்கு கணிசமானது. தொடக்கத்திலேயே முயன்றால், தீயசகவாசங்களில் இருந்தும், தகுதியற்ற புத்தகங்களிருந்தும் குழந்தையை விலக்கி வைக்கமுடியும். தாமதமாக செய்யப்படுகின்ற முயற்சிகள் சரியான பலனை அளிப்பதில்லை.

தொலைக்காட்சி மற்றும் வானொலியில் வரும் நல்ல நிகழ்ச்சிகளைக் கவனிக்கும்படி குழந்தைகளைத் தூண்டலாம்.

நீங்கள் உங்களுடைய குழந்தைக்கு எதைக் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் நல்ல கல்வியைக் கொடுங்கள். அது போதும். குழந்தையின் குணாதிசயத்தைமேம்படுத்துவதற்கு.

"நீங்கள் எத்தனை சரியான முறையிலே வழிநடத்தி இருந்தால், இந்த நிலைக்கு ஆளாகிருப்பேனே" என்று பிள்ளைகளில் உங்கள் பிள்ளை கேட்கும்படி வைத்துக்கொள்ளாதீர்கள்.

அவர்கள் உன்னத நிலையில் இருந்துகொண்டு - என் பெற்றோரும், ஆசிரியரும்தான் எனது உயர்வுக்குக் காரணம் என்று புகழும் வண்ணம் நடந்துகொள்ளுங்கள்.

## அன்னாசிப்பழப் புடிங்

### தேவையான பொருட்களும் அளவுகளும்

| | |
|---|---|
| அன்னாசிப்பழம் | - 1 பெரியது |
| சீனி | - 1/2 கிலோ |
| பாசிப்பருப்பு | - 300 கிராம் |
| சேமியா | - 250 கிராம் |
| ரவை | - 1/2 கிலோ |
| ஏலக்காய்த்தூள் | - 1 தேக்கரண்டி |
| கஜு | - 50 கிராம் |
| பிளம்ஸ் | - 100 கிராம் |
| அன்னாசி எசன்ஸ் | - 10 சொட்டு |
| நெய் | - 1/4 போத்தல் |
| கேசரிப்பவுடர் | - சிறிதளவு |

### செய்முறை

அன்னாசிப்பழத்தைத் தோல் நீக்கி, பின் சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். சீனியை நீர்விட்டு பாகாகக் காய்ச்சவும். காச்சிய பாகிற்குள் வெட்டிய அன்னாசிப்பழத்தை கொட்டி ஊறவைக்கவும். பின்பு, பாசிப்பருப்பை அவிய வைத்துகொள்ளவும். கஜு, பிளம்ஸ் என்பவற்றை நெய்யில் பொரித்து எடுக்கவும். பின் ஏலக்காய்த் தூளையும் சேர்க்கவும். ஊறவைத்துள்ள அன்னாசிப் பழத்துண்டுகளுடன் கலந்துகொள்ளவும். கூடவே கேசரிப்பவுடரையும், எசென்ஸையும் சேர்த்து நன்றாக கிளறவும். நன்றாக கிளறியவுடன், கலவையைக் கண்ணாடி அல்லது சில்வர் பாத்திரத்தில் ஊற்றிப் பரிமாறலாம். விரும்பினால் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு, சிறிது நேரம் கழித்துப் பரிமாறலாம். இது சுவையானதுடன் சத்தானதும்கூட.

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

## முதலுதவி

குழந்தைகள் இருக்கும் வீட்டில் கட்டாயமாக முதலுதவிப்பெட்டி வைத்திருக்கவேண்டிய தேவை இருக்கின்றது. இதற்கென ஒரு பட்டியலே உண்டு. தொற்று நீக்கப்பட்ட சுத்தமான பஞ்சு, பன்டேஜ், வலைபின்னல் துணி, தேமா மீற்றர், மருந்துவகைகள் இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

இரண்டு, மூன்று அளவுகளில் பன்டேஜ் வைத்திருப்பது நல்லது. ஏனென்றால், காயங்கள் எந்த அளவில், எங்கு ஏற்படும் என்பதை முன்னதாகவே ஊகிக்கமுடியாதே!



காயங்களைக் கழுவுவதற்குத் தொற்றுநீக்கி போன்ற திரவங்கள் இருக்கவேண்டும். அவசியம் தேமாமீற்றர் கட்டாயம் இருக்கவேண்டும்.

குழந்தையின் கண்களில் தூசு விழுந்தால், நீரினால் அந்தப் பகுதியைத் துடைத்துவிடலாம். கண்ணில் ஏதாவது சிறுபொருள் விழுந்துவிட்டால், சுத்தமான கைக்குட்டையின் முனையின்மூலம் அதை வெளியே எடுக்கலாம். ஒருபோதும் குழந்தை தன் கண்களைக் கசக்கிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

காதுகளில் ஏதாவது சிறுபொருட்கள் சென்றுவிட்டால், அதை எடுக்க எந்தவித முயற்சியும் செய்யவேண்டாம். உடனடியாக வைத்தியரிடம்தான் போகவேண்டும். பூச்சியாக இருந்தால், காதுக்குள் வெதுவெதுப்பான தண்ணீரை ஊற்றலாம். பூச்சி மேலே வந்து மிதக்கும். எடுத்துவிடலாம்.

குழந்தையின் மூக்கிலிருந்து சம்பந்தமில்லாமல் ஏதோ ஒரு திரவம் வடிந்துகொண்டிருக்க, அது விடாமல் அழுதுகொண்டிருந்தால், எதையோ மூக்கிற்குள் அது செலுத்திக்கொண்டுவிட்டது என்று நினைக்கலாம்.

பயப்படாமல் மூக்கின் பாதியை நீங்கள் விரலால் அமர்த்திக்கொண்டு, மற்றொரு மூக்கினால் வேகமாக வெளியே மூச்சைவிடச் சொல்லலாம். இதன்மூலம் அந்தப் பொருள் வெளியே வரவில்லையென்றால், வைத்தியரிடம்தான் போகவேண்டும்.

குழந்தைகளை ஒருபோதும் அதிகமான வெப்பத்துக்கு உட்படுத்தவேண்டாம். நீண்டதூரம் குழந்தையை அழைத்துச்செல்ல வேண்டுமென்றால், இரு சக்கர வாகனங்களில் செல்வது சரியல்ல.

எதையாவது தேவையற்ற பொருட்களை வாய்க்குள் போட்டுக்கொள்வது குழந்தைகளின் வழக்கம். பெரும்பாலும் இவை ஜீரணப்பாதை வழியாக வெளிவந்து விடுகின்றன.

ஆனால் உணவுக்குழாயிலோ, மூச்சுக்குழாயிலோ சிக்கிக்கொண்டு, பெரும் துன்பத்தை கொடுத்தாலோ, உள்ளே விழுங்கியபொருள் கூர்முனைகளைக்கொண்டது என்றாலோ உடனடியாக வைத்தியரிடம் குழந்தையை அழைத்துச்செல்லுங்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாடு என்ப நாடா வளத்தன நாடுஅல்ல
நாட வளந்தரும் நாடு.

-திருக்குறள்.

## நமது நோக்கு

# முடிவற்ற பேச்சுக்களும் சமாதானத்தின் முனகலும்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையிலான தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பதற்கான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையும் தீர்க்கமான முடிவெதனையும் எட்டாத நிலையில் வழமைபோன்று முடிவடைந்துள்ளது.

சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையானது, ஆரம்பிப்பதற்கு முன்னரே, இருதரப்புக்கு மிடையே புரிந்துணர்வோ அல்லது தேசிய நலன்கருதியாவது ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான விருப்பார்வமோ இருந்தது கிடையாது என்பது பகிரங்கமான விடயமே! அரசியல் மட்டுமல்ல தேசியம் மற்றும் சர்வதேசியம் சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் முரண்பாடுகளுடன் கூடிய கொள்கைகளுடன் பல தசாப்தங்களாகவே முட்டிமோதிக் கொண்டு வரும் இரு தரப்பினருக்குமிடையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான அடிப்படைக் கொள்கையானது இனவாதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதொன்றாக இருந்தபோதிலும் கூட அதனைக் கையாளும் முறைகளில் வேறுபாடுகள் காரணமாக அந்தப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றினை இருதரப்பினரும் இணைந்து எட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் ஒருபோதுமே தென்பட்டதுமில்லை.

இதற்குக் காரணம் இனப்பிரச்சினை எந்த வகையிலும் சுமுகமாகத் தீர்க்கப்படும் நிலை தோன்றுமேயானால் அதன் காரணமாக இருதரப்பு அரசியல் நடவடிக்கைகளும் சிங்கள மக்கள் மத்தியில் அதற்குரியதான இனவாதப் பின்னணியுடன் கூடிய பரபரப்புத் தன்மையை இழந்துவிடுமென அவர்கள் உறுதியாக நம்புவதேயாகும்.

கடந்த காலங்களில் ஆட்சிப்பீடம் ஏறிய சகல அரசுகளும் மிகமோசமான இனவாதத்தையும் மிகவும் கொடூரமான யுத்தத்தையும் மேலோட்டமான சமாதானத்தையும் மட்டுமே தமது கொள்கைகளாக வரித்துக்கொண்டமைதான் இன்றைய நிர்க்கதி நிலைக்குக் காரணமாகும்.

இனவாதமற்ற பிரதான அரசியல் கட்சிகள் தென்பகுதியில் எதுவுமில்லையென்றே கூறமுடியும். செல்வாக்கற்ற சோசலிசம் பேசும் இடதுசாரிக் கட்சிகள் கூட 1960 களிலிருந்து இனவாதக் கொள்கைகளோடு ஒன்றிணைந்து இயங்கவேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டதுதான் வேடிக்கையான விடயம்.

"ஒரு மொழியெனில் இரு நாடு, இரு மொழியெனில் ஒரு நாடு." என அழுத்தமான குரலெழுப்பிய சமசமாஜவாதியான கொல்வின் ஆர்.டி.சில்வாதான் 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பை எழுதி தமிழ் சிறுபான்மை இனவாத இனத்துக்கான கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பறித்த பெருமைக்குரிய இனவெறியராக தன்னை இறுதியில் இனங்காட்டிக் கொண்டார்.

பின்னர், 1977 இல் ஆட்சிக்கு மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்குவந்த ஜே.ஆர்., நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகம் செய்து சிறுபான்மை இனத்தவரை குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ் தமிழரை நிரந்தரமாகவே இரண்டாம்தரப் பிரஜைகளாக்கிய பெருமையை சிங்கள மக்களிடம் பெற்றுக்கொண்டார்.

அவர் தொடக்கிவைத்த இரட்டை ஆட்சிமுறையும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமும் இன்றைய ரணிலின் காலம் வரை தொடர்ந்தே வந்தது.

ஆனாலும், அவர் தொடக்கிய இந்த விநோதமான - சர்வதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையில் எதிர்விளைவுகளை இன்று அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியினர்தான் மோசமாக அனுபவித்து வருகிறார்கள்.

இதேவேளை - சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் சிறிலங்காவின் போட்டி அரசியல் தலைமைகள் இரண்டையும் அதிலும் குறிப்பாக ஜனாதிபதியை பெரும் குழப்புத்துக்கு உள்ளாக்கியுள்ள நெருக்கடிச் சூழலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் ஒரு தேசிய நல்லிணக்க அரசை அமைக்கும் மற்றொரு அரசியல் சதிக்கான மூலோபாயத்தை வகுத்து அதற்கான அழைப்பை சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கா அழைப்பாக முலாமிட்டு சந்திரிகா ரணிலுக்கு அனுப்பினார்.

தேசிய நல்லிணக்க அரசுப் பொறிக்குள் சிக்கினால் தமது கட்சி நிரந்தரமாகவே முகவரி இழந்த ஒன்றாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்த ரணில், சந்திரிகாவுடனான பேச்சுவார்த்தைகளில் சமரசத்துக்கு சாத்தியமற்ற இறுக்கமான கொள்கைகளையே கடைப் பிடித்துவருவதும் தெளிவு.

ஆக, எத்தனை சுற்றுப் பேச்சு நடந்தாலும் தான் பறித்த அமைச்சுக்களை மீளவும் பெற்றுக்கொள்ளாமல் ரணில் எந்தப் பேச்சுக்களிலும் இணக்கத்திற்கு வரப்போவதில்லை என்பதும் சந்திரிகாவுக்குத் தெரியும்.

இந்த நிலையில் தன்வசமிருந்த சமாதானப் புறாவை சந்திரிகாவின் கையில் திணித்துவிட்டு, நீங்களே இதனைக் கவனித்துக்கொள்ளுங்கள் என ரணில் நழுவி நிற்பதானது அவருக்கு பெரும் தலைவலியாக மட்டுமல்ல.... சர்வதேசத்திற்கு சமாதானம் குறித்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாமலுமுள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு முடிவுகாண தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் ஆபத்திலிருந்து தப்ப சந்திரிகா வகுக்கும் மூலோபாயங்களை ரணில் தந்திரமாகத் தவிர்த்தும் தகர்த்தும் வருகிறார் என்பதை இருவருக்கும் இடையிலான நான்காம் சுற்றுப்பேச்சும் தீர்வற்று முடிந்தது உறுதிப்படுத்துகிறது.

ஆளையாள் விழுங்கும் தந்திரோபாயத்துடன் இரு தரப்பும் இணக்கம் காண்பது சாத்தியமற்றது என்பது அரசியல் யதார்த்தமாகும்.

இந்த நிலையில் இருவருக்குமிடையேயும் சிக்கித் தவிக்கும் சமாதானத்தின் எதிர்காலம்தான் பரிதாபத்திற்குரியதாகும்.

## நாடும் நடப்பும்



செய்தி: ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் இடையிலான நான்காவது சுற்றுப் பேச்சும் தோல்வி.

# ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதா; தமிழீழம் உருவாக இடமளிப்பதா?

## சிங்களவர் தீர்மானிக்கும் காலம் இது - ராஜித சேனாரத்ன

ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதா? தமிழீழம் உருவாவதற்கு இடம் கொடுப்பதா? என்பது குறித்து, சிங்கள மக்கள் தீர்மானிக்க வேண்டியகாலம் வந்துவிட்டது என்று, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டிற்குப் பொருந்தக்கூடிய சமஷ்டி அரசியல் அமைப்பு முறை தொடர்பாக, கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ் சேனநாயக்க, வடக்கு - கிழக்கு பகுதிகளில் குடியேற்றத்தினை ஆரம்பித்து, சிங்கள மக்களை அங்கு குடியேற்றினார். இன்னொரு காணி அமைச்சர் வந்து, அங்கு சிங்கள குடியேற்றங்களைச் செய்யமாட்டார் என்பதற்கு, என்ன உத்தரவாதம் என்று - தமிழ் மக்கள் கேட்கின்றார்கள்.

சிங்களக் குடியேற்றங்கள்மூலம், தமது மண் பறிபோவதாகத் தமிழர்கள் அஞ்சுகிறார்கள். தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது எனவும் அவர்கள் பயப்படுகிறார்கள். எனவே - காணி உரிமை, பாதுகாப்பு உத்தரவாதங்கள் தொடர்பாக அவர்கள் பேசுகின்றார்கள். இந்தநிலையில், தமிழர்களின் இந்த அச்சத்தை இடைக்கால நிர்வாக அமைப்பின் மூலமாகவோ, வேறு எந்த வழியிலோ போக்க வேண்டிய கடப்பாடு - சிங்கள மக்களுக்கு உண்டு என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சமஷ்டி அரசியலமைப்புமுறை - பல இனக் குழுக்கள் வாழும் இந்த நாட்டுக்கு மிகப்பொருத்தமானது. அதுவே இனப்பிரச்சனைத் தீர்வுக்கும் சாதகமாகக் கூடியது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இன நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரசாரங்கள் நாட்டின் தேசிய நலனுக்குக் கேடு விளைவிக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

முரண்பாடான சிந்தனைகளிலிருந்து விடுபட்டு - வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழும் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களில், நாம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பிரித்தானியர் - இலங்கையை விட்டுச்சென்றபோதும், இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோதும், ஒற்றையாட்சியுடன்தான் அதனைக் கையளித்தனர். அதற்குப் பிற்பட்ட காலங்களில் அதிகாரப் பரவலாக்கலினை - டட்லி சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோர் மேற்கொண்டனர். எனினும், அது பலனளிக்கவில்லை. அது உரியமுறையிலான அதிகாரப் பகிர்வு அல்ல என்றும், தமிழ் மக்கள் எதிர்த்தனர். அவ்வாறு அரைகுறையாக அன்று ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வு முறைகளைக்கூட, அப்போது தென்பகுதியிலுள்ள அரசியல் தலைமைகள் எதிர்த்தனர்.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தை அன்று சிறிமாவோ பண்டாரநாயக்க கடுமையாக எதிர்த்தார், விமர்சித்தார். இதுதான் இன்றும் நடக்கிறது. என்ன, ஏது என்று அறியாமல், எல்லாவற்றையும் எதிர்க்கிறார்கள். சிங்கள மக்களை தவறான பாதைக்குக் கொண்டுசெல்கின்றார்கள். பூரணத்துவமான சமஷ்டி அரசியல் அமைப்புமுறை, இந்த நாட்டிற்குப் பொருந்தக்கூடியது. இது குறித்து விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்தவேண்டும். இனவுறவின் புரிந்துணர்விற்கான இறுதிக் கட்டம் இது என்பதையும் உணரத்தவறிவிடக்கூடாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை 31 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நடமாடும் சேவை, இம்மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2 ஆம் திகதிவரை - யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் - ஆவணங்கள் தொலைத்தமையால் - இதுவரை பதிவுசெய்யப்படாத வாகனங்களை பதிவு செய்யவும் மற்றும் ஆவணங்கள் தொலைந்தமையால்- இதுவரை உடமை மாற்றம் செய்யப்படாத வாகனங்களை உடமை மாற்றம் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் கொழும்பு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காமினி எஸ்.செனரத் தலைமையில் மேலதிக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மற்றும் 12 மோட்டார் வாகனப்பரிசோதகர்கள் உட்பட, 26 பேர் அடங்கிய குழுவொன்று பங்குபற்றவுள்ளது.

# சாரதி அனுமதிக்கான பரீட்சை 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது

மோட்டார் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு, யாழ். போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்தில் விண்ணப்பித்தோருக்கான எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இது குறித்து விண்ணப்பதாரிகளுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், கடிதம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் - யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும், யாழ். மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார். (43)

## முஸ்லிம்களை தனித்தரப்பாக

# அங்கீகரிக்கக் கோரும் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு

அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில், முஸ்லிம்களைத் தனித்தரப்பாகப் பங்குபற்றுவதற்கு இடமளிக்கக்கோரும் நாடாளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தப் பிரேரணைக்குத் தமிழ்க் கட்சிகளதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் ஆதரவைத் திரட்டும் பணியில் வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பிரேரணை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, புளொட், ஜே.வி.பி. ஆகிய கட்சிகளைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாட இருப்பதாக, ஒன்றியத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா சரியான நிலைப்பாட்டிற்கு வரவேண்டும்

## — சுரேஷ் பிரேமச்சந்திரன் பேட்டி —

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கடந்த வியாழன் சந்தித்த பின்னர் சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) எமது செய்தியாளருக்கு அளித்த பிரத்தியேக பேட்டி.

☆ ***கேள்வி : இன்றைய சந்திப்பில் இந்தியா தற்போதைய சூழலில் வெளியிட்டுவரும் கருத்துக்கள் தொடர்பாகவும், பேசப்பட்டதாக அறிகின்றோம். அதுபற்றி சரியான விபரத்தைத் தருவீர்களா?***

***பதில் :*** விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இந்தியாவின் பங்களிப்பு பெரியளவில் இருந்து வந்திருக்கிறது. இந்தியா ஒரு அயல்நாடு மாத்திரமல்ல, இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவினுடைய பாதுகாப்பு நலன்கள் தொடர்பாக, இந்தியா தற்போது கரிசனையாக இருப்பது உண்மையான விடயம்.

அதேசமயம், இலங்கைத்தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக, அந்தத் தீர்வை திட்டமிட வேண்டியதும், அது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுநடத்தி தீர்வை எட்டவேண்டியதும் தமிழ்மக்களது பொறுப்பும், கடமையும். இந்தியா இதுவரை கூறிவந்தது - இது உங்களுடைய உள்நாட்டுப்பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியது நீங்கள். பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாணவேண்டும். அதன்மூலம் வரும் தீர்வை நாம் ஆதரிப்போம் என்ற தொனிப்பட இந்தியா இதுவரை கூறி வந்தது.

எனவே, அந்தவகையில் விடுதலைப் புலிகள் அரசுடன் பேசுவதற்கான ஒரு பிரேரணையைக் கொடுத்திருக்கிறார்கள். அது தொடர்பாக இன்னும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவே இல்லை. அதற்கிடையில் நாட்டில் குழப்பங்கள், நெருக்கடிகள் போன்ற சூழல் ஏற்பட்டிருப்பதால், பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவில்லை. ஆனால், அதற்குமுன் இந்திய அரசு இந்தப் பேச்சுவார்த்தை, விடுதலைப்புலிகளின் பிரேரணை தொடர்பாகத் தனது கருத்துக்களைக் கூறத்தொடங்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனைகள் மிக அதிகமாகவுள்ளது. இந்தியாவினால் இதனை ஏற்றுக்கொள்ளமுடியாதது போன்ற கருத்துக்களை அவர்கள் சொல்ல ஆரம்பித்து இருக்கின்றார்கள். ஆனால், உண்மையாகவே விடுதலைப் புலிகள் கொடுத்த பிரேரணைகள் தொடர்பாகப் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக இலங்கை அரசு கூறியுள்ளது. இது தொடர்பாகவே அரசும், புலிகளும் இன்னமும் பேசவில்லை. ஆகவே, அதற்கு முன்னர் இந்தியா அரசு, அந்த அரசின் அதிகாரிகள், முன்னைநாள் அதிகாரிகள், வெளியிடும் கருத்துக்களானது - நிச்சயமாக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஆதரவாக இருப்பதென்பதற்குப் பதிலாக, சிங்களப் பெருந்தேசியவாதத்தை மேன்மேலும் விஸ்தரிப்பதற்கும், துணைபோவதற்குமான கருத்துக்களாகத்தான் இந்தியாவினுடைய அண்மைக்காலக் கருத்துக்கள் அமைந்து வருகின்றன.

அண்மையில் இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலர் ராஜ்கோத்ரா - கொழும்பில் நடந்த மாநாட்டில் கூறும்போது, விடுதலைப் புலிகளின் இந்தத் தீர்வுத்திட்டத்தை அவர் நிராகரித்ததுடன், இது இந்தியாவால் ஏற்றுக் கொள்ளமுடியாதெனக் கூறியிருந்தார். அவ்வாறான கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னர், முதலில் பேச்சுவார்த்தை அரசிற்கும்-புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கவேண்டும். இந்த பிரேரணைகள் தொடர்பாகப் பேசி ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டும். அது எதுவுமே வரமுன்னதாக, இந்திய அதிகாரிகள் எமது தீர்வுத்திட்டத்தை விமர்சிப்பது- சிங்கள அரசாங்கத்திற்கும், சிங்கள் பெருந்தேசியவாதத்திற்கும் துணைபோகும் செயற்பாடாகத்தான் இருக்கிறது.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்ல. வரலாற்றுக்காலம் தொடர்பாக தமிழ்மக்கள் இந்தியாவிற்கு ஆதரவாக இருந்து வருகிறார்கள். அதனை நாம் இப்போதும் தாய்நாடாகவே கருதிவருகின்றோம். அது மாத்திரமல்லாமல், இந்தியாவினுடைய நலன்கள் எவற்றுக்கும் எதிராக தமிழ் மக்கள் துணைபோகமாட்டார்கள். அத்துடன், இவை தொடர்ப்பில் தமிழ்க்கட்சிகளும் இடையூறாக இருக்கமாட்டாதெனவும் கூறிவந்துள்ளன. விடுதலைப் புலிகளின் சார்பில் இதுபற்றி அண்மையில் லண்டனில் வைத்து அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். ஆகவே, இந்த நிலையில், இந்திய அரசாங்கம், இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சரியானதொரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டும். அது பேச்சுவார்த்தை ஊடாக நாம் எட்டக்கூடிய தீர்வுகளை அடைவதற்கு, அது நிச்சயமாகத் தடையாக இருக்கக்கூடாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் வரக்கூடிய தீர்வை ஏற்றுக்கொள்வதற்கு, ஆதரிக்கக்கூடிய நிலைப்பாட்டை இந்தியா எடுத்துக் கொள்வதென்பது நிச்சயமாக பேச்சுவார்த்தையைச் சரியான திசையில் கொண்டுசெல்வதற்கு ஆதரவாக இருக்கமுடியும். அதை விடுத்து, பேச்சுவார்த்தைக்கு முன்னரேயே தடங்கல்களை ஏற்படுத்து வதுபோல செயற்படுவதானது - தமிழ்மக்கள் மத்தியில் விரக்தியையும், வெறுப்பையும், பேச்சுவார்த்தை சரியான திசைக்குச் செல்லுமா என்ற அச்சத்தையும் ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கிறது.

எனவே, இது தொடர்பில் இந்தியா தனது நடவடிக்கைகளைக் குறிப்பாக, இந்திய அதிகாரிகள் மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

☆ ***? நாட்டில் தேர்தல் வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தத் தேர்தல் வருமாக இருந்தால், தமிழர் தேசிய கூட்டமைப்பு எவ்வாறான செயற்பாட்டை முன்னெடுக்கக்கூடிய நிலைப்பாட்டிலுள்ளது?***

நிச்சயமாகத் தமிழ் தேசியக்கூட்டமைப்பு இன்றிருப்பதைப் போன்றே தொடர்ந்து இயங்கும் என்பது மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கு ஓர் விடிவினை ஏற்படுத்தும். தமிழ் தேசிய கூட்டமைப்பு வலுவாகவும், இறுக்கமாகவும் செயற்படும் என்பது எல்லோருடைய கருத்துமாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று அந்தக் கருத்தை அழுத்தம் திருத்தமாக உரைத்து இருக்கின்றார்கள்.

எமது கடந்தகால செயற்பாடுகள் - சர்வதேசரீதியாகத் தமிழ் மக்களுக்கு மிகவும் பாரிய அளவிலான பலத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. வெளிநாட்டு மக்கள் மத்தியிலும், சர்வதேச மக்கள் மத்தியிலும் சரியான கருத்துக்களை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆகவே, இன்னுமோர் தேர்தல் வருமாயிருந்தால், நாங்கள் எல்லோரும் இணைந்து ஒருமித்த முறையில் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

***கே: தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்சிக்குள் உள்ள முரண்பாடுகள் காரணமாக- தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து நல்ல முறையில் இயங்குவதற்கு ஏதும் தடை இருக்காதா?***

ப: நான்கு கட்சிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் முக்கியமான அங்கம் என்ற வகையில், தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பது, தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும், எமது எதிர்கால வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கும் உதவியாக இருக்கும். (03)

# இந்த வார பலன்கள்

## 12.12.2003 ~ 18.12.2003 (திருக்கணிதம்)

| செவ் | ராகு | | சனி |
|---|---|---|---|
| யுரே | 14 பி.ப 3.40 சிங்-சந்<br>16 பி.ப 1-29 தனு-சூரி<br>16 பி.ப 2.13 மக-சுக்<br>16 இ.10-56 கன்-சந்<br>18 பி.இ 3-06 துல-சந் | | சந் |
| நெப் | | | குரு |
| புத, சுக் | சூ | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு பல வகையாலும் நற்பலன்கள் காட்டும். வருவாய் சிறப்பாக அமையும். குடும்பத்தில் சுபீட்சம் காணப்படும். கணவன் - மனைவியிடையே அந்நியோன்னியம் நன்றாக இருக்கும். பிள்ளைகள், நண்பர்களால் உதவி உண்டு. கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினைகள் இருந்தால் அவை தீரும். குடும்பப் பெண்கள் மனத்திருப்தியுடன் காணப்படுவர். திருமணம் முதலான விடயங்கள் நல்ல முடிவைத்தரும். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் செயற்படுவர். மேலதிகாரிகளின் உதவிகளும் கிட்டும். விவசாயத்துறையினர் தமது விளை பொருட்களைக்கூடிய இலாபத்துக்கு விற்கமுடியும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்கு முன்னேற்றமடையும், பணமும் சேரும். மாணவர்கள் ஊக்கத்துடன் காணப்படுவர்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியினருக்கு நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். அலைச்சலும், மனநிம்மதிக் குறைவும் காணும். இனபந்துக்களால் தொல்லைகள் ஏற்பட இடமுண்டு. பிள்ளைகளும் தொல்லை தருவார்கள். வருவாய் செலவுக்குப் போதாமல் இருக்கும். எனவே, கடன் தொல்லைகளும் தலை தூக்கும். குடும்பப் பெண்களும் மனச்சோர்வுடன் காணப்படுவர். தேகசௌக்கியம், குடும்ப சுகம் பாதிப்படையக்கூடும். மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். திருமணம் சம்பந்தமான விடயங்கள் இழுபறி நிலையிலிருக்கும். தூரதேசப் பிரயாணங்களும் கைகூடாது. உத்தியோகத்தர்கள் மன உற்சாகமிழந்து விரக்தியுடன் காணப்படுவர். வருவாய் போதாமல் இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். மாணவர்களுககு பரீட்சை முடிவுகள் திருப்திகரமாக அமையாது.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியினருக்கு நன்மை, தீமை கலந்த பலன்களே இவ்வாரம் நடக்கும். செய்தொழிலில் பிரயாசை கூடுதலாகக் காட்டும். எனினும், ஓரளவு வருவாய் கிட்டும், உறவினர்களின் வரவு மகிழ்ச்சியைக் கொடுக்குமாயினும், செலவுக்குப் பணம் போதாமலிருக்கும். சுபகாரிய முயற்சிகள் தாமதத்தின்மேல் கைகூடும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. உத்தியோகத்தர்கள் ஊக்கக்குறைவால் கருமங்களை நிறைவேற்ற முடியாமல் இருக்கும். உயரதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகவேண்டியிருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடந்தாலும், கடன் வியாபாரத்தால் பணம் சேராது. மாணவர்களுக்கு முயற்சியின் மேல் நற்பலன் காண்பர். பரீட்சைகளில் சித்தி உண்டு.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



இவர்களுக்கு குடும்பத்தில் அமைதி குறைந்த சூழ்நிலை தோன்றும். குடும்ப அங்கத்தவர்களிடையே சிறு பிணக்குகள் காணப்படினும் உடனுக்குடன் தீர்க்கப்படும். வருவாயிலும் பார்க்கச் செலவு கூடுதலாகக்காட்டும். தேக அசௌக்கியத்தால் வைத்தியச் செலவுகளும் கூடுதலாகவே இருக்கும். குடும்பப் பெண்கள் திருப்தியற்றுக் காணப்படுவர். திருமணப் பேச்சு பல இழுபறிகளின் பின் நிறைவுபெறும். பிரயாணங்களின்போது அவதானமாக நடக்கவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு கூடுதலாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். பெரிய இலாபம் கிடையாது. மாணவர்களுக்கு பொதுவாக நற்பலனுண்டு. பரீட்சைகளில் சித்தி கிட்டும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியைச் சேர்ந்தவர்களுக்கு மனமகிழ்ச்சி, உற்சாகம் என்பன தென்படும். தொழில் வருவாய் சிறப்பாக அமையும். சிலருக்கு அதிர்ஷ்டம்மூலம் பொருள் வரவு கிட்டும். குடும்பத்தவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். வீட்டில் உறவினரின் வருகையால் குதூகலமும், மகிழ்ச்சியும் ஏற்படும். தேகாரோக்கியத்தில் கோளாறுகள் இருக்காது. இல்லற வாழ்வில் இணைய விரும்புவோருக்கும் நிலை சாதகமாக அமையும். நண்பர்களால் உதவி உண்டு. உத்தியோகத்தர்கள் கருமத்தில் ஊக்கமும், உற்சாகமும் உடையவராகக் காணப்படுவர். சிலருக்கு வசதியான இடமாற்றம் கிட்டும். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் நன்கு விற்பனையாகி பணம் சேரும். மாணவர்கள் மிக்க ஆர்வத்துடன் கல்வியில் ஈடுபடுவர். பல பாராட்டுக்களையும் பெறுவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியினருக்குத் தொழிலில் அதிக பிரயாசை இருக்கும். முயற்சிக்கேற்றளவு வருவாய் கிடையாது. எதிர்பாராத நெருக்கடிகள் ஏற்படுவதால், செலவு அதிகமாகும். குடும்ப உறவுகளில் விரிசல் ஏற்படலாம். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படும். திருமண விடயங்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். தேவையற்ற பிரச்சினைகள் வந்துசேரும். எதிலும் அவதானம் தேவை. உத்தியோகத்துறையிலுள்ளோருக்கு உயரதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப்பழுவும், பொறுப்பும் கூடும். முன்பு கொடுத்த கடன்கள் மீளப்பெறுவது கஷ்டம். வர்த்தகர்கள் வியாபாரத்தில் நஷ்டத்தையே காண்பர். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் குறைந்து காணப்படும். தொடங்கும் கருமங்கள் இழுபறி நிலையிலிருக்கும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு நன்மைதரும் வாரமாக அமைகிறது. தொழில் முயற்சியில் ஊக்கமும், வருவாயும் அதிகரிக்கும். தொடங்கிய கருமங்கள் விரைவில் இனிதாக அனுகூலமாகும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவார்கள். தேகசுகம் அதிகம் பாதிப்படையாது. திருமணம் சம்பந்தமான விடயங்கள் விரைவில் கைகூடும். புதிதாக உத்தியோகத்தை விரும்புபவர்களுக்கு விரைவில் நியமனங்கள் கிடைக்கலாம். சில உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு கையிருப்பிலுள்ள பொருட்கள் விரைவில் விற்பனையாகும். ஆடம்பரப் பொருட்கள் விற்பவர்கள் அதிக இலாபம் பெறுவர். மாணவர்களுக்கு உயர்ச்சி உண்டு. பாராட்டுக்களும் பெறுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவர்களுக்கு குடும்பத்தில் நல்ல வருமானம் கிடைக்கும். எனினும் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். ஆடம்பரப் பொருட்களை வாங்கிக் குவிப்பதில் ஆர்வமுடையவர்களாக இருப்பர். தேகசுகம் இடையிடையே பாதிப்படையலாம். அயலவர்களால் உதவிகள் உண்டு. அந்நிய தேசத்திலிருந்து பொருள் வரவு கிட்டும்,. திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதம் காணும். உத்தியோகத்தவர்களுக்கு கருமத்தில் ஆர்வமும், உயர்ச்சியும் உண்டு. சகதொழிலளார்களின் உதவிகள் கிட்டும். வர்த்தகர்களுக்கு சிறப்பான முன்னேற்றமும், வருவாயும் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். ஆசிரியர்களின் ஆசியையும் பெறுவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



குடும்பத்தவர்களுக்குள் ஒற்றுமை பேணப்படும். பொருள் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் தென்படும். குடும்பப் பெண்கள் மனநிறைவடைவர். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். இனபந்துக்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். வங்கியில் பண வைப்புக்கள் திருப்தியைத் தரும். அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ளவேண்டியிருக்கும். உத்தயோகத்தவர்களுக்கு உயர்ச்சியும், பாராட்டுக்களும் கிடைக்கும். உயரதிகாரிகளுடன் மகிழ்ச்சியைக் கொண்டாடுவர். வர்த்தகர்கள் வியாபாரம் சிறப்பாகச் செய்து, அமோக வருவாயைப் பெறுவர். புதிய முதலீடுகளுக்கும் நன்று. வியாபாரம் சம்பந்தமாகப் பிரயாணம் மேற்கொள்வர். மாணவர்கள் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் காணப்படுவர். சித்தியும் பாராட்டும் உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு தொழிலில் பிரயாசை கூடுதலாக இருக்கும். எப்படி முயற்சித்தாலும் வருவாய் குறைவாகவே கிடைக்கும். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் தோன்றலாம். இடையிடையே தேகசுகக் குறைவும் காணும். குடும்பத்தில் நிம்மதி இருக்காது. தொடங்குங் கருமங்கள் தாமதமாகவே நிறைவு பெறும். திருமண முயற்சிகள் தடை தாமதத்தையே காட்டும். வாகனம் வைத்திருப்போர் அதனால் அதிகம் செலவழிக்க நேரிடும். உத்தியோகத்தர்கள் மன அமைதியுடன் தொழில் செய்தால், முன்னேற்றம் காண்பர். வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடாது. வியாபாரிகள் கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவேண்டும். ஏமாற்றுப்பேர்வழிகளிடம் அகப்பட நேரிடும். மாணவர்கள் கல்வி தவிர ஏனைய துறைகளிலும் ஆர்வம் காட்டுவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



இவர்களுக்கு குடும்பப் பிரச்சனையும், நிம்மதியின்மையும் ஏற்படும். பொருளாதாரப பற்றாக்குறை இருநது கொண்டே இருக்கும். வீட்டில் அன்றாட செலவுகளைச் சமாளிக்க முடியாமல் இருப்பர். அயலவர்களும்டனும் மனவேறுபாடு ஏற்படலாம். பெண்கள் மன விரக்தியுடன் காணப்படுவர். நினைத்த கருமங்கள் எதுவும் இலகுவில் கைகூடாது. திருமணப் போச்சுக்கள் காலவரையறையின்றி தள்ளிப்போகும். உத்தியோகத்தை விரும்புவோருக்கு காலதாமதம் காட்டும். உத்தியோகத்திலிருப்போர் தொழிலில் ஆர்வம் குறைந்து காணப்படுவர். அலுவலகத்தில் பிணக்குகள் தோன்றலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்களுக்குப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியாக இராது. கல்வியில் ஊக்கமெடுத்தல் நன்று.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



இவர்களுக்கு செய்தொழிலில் லாபம் கிடைக்கும். வீட்டில் மனநிறைவும், மனமகிழ்ச்சி, ஆரவாரமும் காணப்படும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். குடும்ப உறவினர்களின் வருகை அதிகரிக்கும். வீட்டில் மங்கல கருமங்கள் நடைபெற இடமுண்டு. திருமணததை எதிர்நோக்குவோர் மகிழ்ச்சியடைவார்கள். விரும்பியவாறு வாழ்க்கைத்துணை அமையும். அந்நிய தேசப் பிரயாணம் மேற்கொள்ள இருப்பவர்களுக்கும் நற்பலன் கிடைககும். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியுடனும், உற்சாத்துடனும் காணப்படுவர். உயரதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். வர்த்தர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வந்துசேருவார்கள். மாணவர்கள் கல்வியில் ஊக்கமுடையவர்களாகவும், நிறைந்த புத்திக்கூர்மை உடையவர்களாகவும் காணப்படுவர். பரீட்சைகளில் கூடிய மதிப்பெண் பெறுவர்.

# இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்!

காஸாப்பிரதேசத்தில் அமைந்துள்ள நூபா அகதிமுகாமுக்குள் நேற்றுக் காலை நுழைந்த இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன், 17 பேர்வரை காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் வான்படையினரும் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

ஒரு பலஸ்தீனப் போராளியும், 3 பலஸ்தீனப் பொதுமக்களுமே இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அத்துடன், நான்கு சிறுவர்களும் காயமடைந்தனர்.

20 கவச வாகனங்கள் சகிதம் அந்தப் பிரதேசத்தை முற்றுகையிட்ட இஸ்ரேலியப் படையினர், முக்கிய இஸ்லாமிய ஜிகாட் அமைப்பின் தலைவர் ஒருவரைத் தேடியே அந்த முகாமுக்குள் பிரவேசித்ததாக தெரிவித்தனர்.

இதேவேளை,

பலஸ்தீனத் தலைவர்கள் சமாதானப் பேச்சுகளுக்கு முன்வராவிடின் ஒரு தலைப்பட்சமான முடிவுகளை எடுக்கநேரிடலாம் என, இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் எச்சரித்துள்ளார்.

# இஸ்ரேலில் குண்டு வெடிப்பு மூவர் பலி, 12 பேர் காயம்!

இஸ்ரேல் நகரான டெல் அவிவ்வில் அமைந்துள்ள நாணயச் செலவாணி கட்டடத்தில் நேற்று நடைபெற்ற குண்டுவெடிப்பில் மூவர் கொல்லப்பட்டதுடன், 12 பேர்வரை காயமடைந்ததாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், இந்தக் குண்டுவெடிப்புக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பிருக்கின்றதா என்பது தெரியாதிருப்பதாகத் தெரிவித்த பொலிஸார்,

இந்தத் தாக்குதலில் - பாதையில் தரித்துநின்ற வண்டிகள் பல சேதமடைந்ததாகவும் தெரிவித்தனர்.

## ஈராக்கின் புனரமைப்புத் தொடர்பான

# அமெரிக்காவின் கருத்திற்கு கிறிஸ் பற்றன் கடும் எதிர்ப்பு!

ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிக்கான ஒப்பந்த வேலைகளுக்கான திட்டங்களில் - அமெரிக்கா ஈராக் மீது போர்தொடுத்தபோது, உதவ முன்வராத நாடுகள் பங்குபற்றக்கூடாதென அமெரிக்கா தெரிவித்த கருத்துக்கு - ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். மக்களை ஒன்றிணைப்பதற்கு அமெரிக்காவின் கருத்துக்கள் உதவாதென அவர் மேலும் தெரிவித்தார்.

உலக வர்த்தக சட்டங்களுக்கு அமெரிக்காவின் கருத்து முரணானதா என ஆராயவுள்ளதாகவும் கிறிஸ் பற்றன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - ஜேர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளும் அமெரிக்காவின் இந்தக் கருத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

18.6 பில்லியன் டொலர்கள் வரையான தொகையினை ஈராக்கின் நிர்மாணப் பணிகளுக்கு செலவிடுவதற்கான ஒப்பந்தங்கள் உலக நாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஈரானுக்கு உளவுத் தகவல்களை வழங்கிய இரு பாகிஸ்தானிய விஞ்ஞானிகள் கைது!



பாகிஸ்தானில் இரு அணு விஞ்ஞானிகள் தேசத்துரோக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர். அணுசக்தி உற்பத்தி தொடர்பான தகவல்களை ஈரானுக்கு வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பரூக் முஹமட், யசின் மேகன ஆகிய இரு விஞ்ஞானிகளுமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

1998 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட அணுகுண்டுச் சோதனையின்போது மேற்படி இரு விஞ்ஞானிகளுமே பொறுப்பாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவர்கள் கைதுசெய்யப்பட்டமை நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் மிக்க சம்பவம் எனத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் வெளிநடப்புசெய்துள்ளார்கள்.

## 55 ஈராக்கியர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு

சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதப் படுகொலைகளுடன் தொடர்புடையவர்கள் என்று - 55 பேருடைய பெயர்களை ஈராக்கின் இடைக்கால நிர்வாக அமைப்பு வெளியிட்டுள்ளது.

அமெரிக்கப்படையினரால் கைதுசெய்யப்பட்ட சதாமின் நெருங்கிய உறவினரும் அவரது படைத் தளபதியுமான அல்ஹசன் மஜித் மீதும் கொலைக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. இவர் 1988 ஆம் ஆண்டு குர்திஷ் இன மக்கள் மீது நச்சுவாயுத் தாக்குதல் மூலம் இனப் படுகொலைகளை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# காரில் பற்றிய தீயினால் ஜோர்தானியர் மரணம்!

இத்தாலியின் வடபகுதியின் மொகுடனாவில் நேற்றுக் காலை யூதர்களின் வழிபாட்டுத்தலத்தின் அருகில் கார் ஒன்று தீப்பிடித்துக் கொண்டதில், காருக்குள் இருந்த ஜோர்தானியர் ஒருவர் கொல்லப்பட்டார்.

எளிதில் தீப்பற்றக் கூடிய புறொபீன் வாயுவில் இயங்கும் கார் தீப்பற்றிக்கொண்டபோது, தீயை அணைப்பதற்கு காரின் அருகில் பொலிஸார் சென்றபோது காருக்குள் இருந்த ஜோர்தானியர், தன்னைத்தானே எரித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் - தற்கொலை முயற்சியெனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## உலக நோக்கு



அண்மையில் சீனாவில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில், வீடிழந்து புகலிடம் தேடிச் செல்லும் ஓர் குடும்பத்தினரையும், தமது உறவுகளைத் தேடியலையும் சிலரையும் படத்தில் காணலாம். இந்த வெள்ள அனர்த்தத்தினால் 650 000 இற்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனாவில் அடிக்கடி இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றன. அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கும் சீனர்கள் பலவாறு முயற்சி செய்துவருகிறார்கள். எனினும் இயற்கை அனர்த்தத்தைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. அவ்வாறு ஏற்பட்ட தீ விபத்தொன்றை அணைக்கப் பலர் முயல்வதை படத்தில் காணலாம்.

## பிரான்ஸில் முஸ்லிம் பெண்கள்

# 'பர்தா' அணியத் தடை செய்யப்பட்டமையை விசாரிப்பதற்கு ஆணைக்குழு அமைப்பு!

முஸ்லிம் பெண்கள் - பர்தா அணிந்து பாடசாலைக்குச் செல்வது பிரான்ஸில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் தடைசெய்யப்பட்டது.

பர்தா அணிந்து பாடசாலை செல்லும் மாணவர்கள்- பலவேளைகளில் பாடசாலையில் இருந்து வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இதனால் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு முன்னாள் அமைச்சர் 'பேர்னாட் ஸ்ராட்சி' தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை விரைவில் பிரான்ஸ் அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த ஆணைக்குழு அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர் மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை பிரான்ஸ் அதிபர் சிராக் வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இந்த ஆணைக்குழுவின் தலைவர் 'ஸ்ராட்சி' - ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், சமூகவியலாளர்கள் எனப் பலரது கருத்துக்களையும் அறிந்துகொள்வதற்காக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசனைகளை நடத்தியுள்ளார்.



பிரான்ஸ் புரட்சிகளின் பின்னர் பிரான்ஸ் மக்கள் மதச்சார்பின்மையில் அதிக நாட்டம் எடுத்துவருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகக் கூடுதலான முஸ்லிம்மக்களைக் கொண்ட நாடாக பிரான்ஸ் விளங்குவது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸில் 5 மில்லியன் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

## கட்சித்தாவலைத் தடுக்க

# இந்திய நாடாளுமன்றில் புதிய சட்டம் அமுலாகும்!



கட்சித் தாவல்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் கட்சி மாறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய இந்திய நாடாளுமன்ற சட்டங்களின் மூலம் கட்சியின் மூன்றில் ஒரு பகுதியினர் ஆட்சியில் இருந்து பிரிந்து செல்ல விருப்பம் தெரிவித்தால், அந்த உரிமை அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இதன்மூலம் - எதிர்க்கட்சிக்கு, ஆளுங்கட்சியின் அங்கத்தவர்கள் கணிசமான அளவில் செல்ல முற்பட்டால் அரசாங்கம் கலைக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

புதிய நடை முறைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் - நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் சுஸ்மா சுவராஜ் உரையாற்றிய போது, இது தேர்தல் தொடர்பான சட்டங்களில் புதிய மைல்கல் எனத் தெரிவித்தார்.

பிறிதொரு சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும், அதன் மூலம் சட்டசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் பதினைந்து சதவீத அமைச்சுக்கள் எண்ணிக்கையாக இருக்கவேண்டும் எனவும் சுஸ்மா சுவராஜ் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் அளவிற்கதிகமாக அமைச்சுக்கள் இருப்பதால் அதிக பணம் விரயமாவது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பல்கலை. அனுமதிக்கான இசற்ஸ்கோர் வெளியானது!

(கெழும்பு)

2003 ஆம், 2004 ஆம் கல்வி ஆண்டில் நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான 'இசற்ஸ்கோர்' புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில், வைத்திய பீடத்திற்கு 2.1551 என்ற அதியுயர் இசற்ஸ்கோர் புள்ளிகள் கொழும்பு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பொறியியல் விஞ்ஞான பீடத்திற்கு, நாட்டின் கூடுதலான புள்ளிகளான 2.1612 இசற்ஸ்கோர் புள்ளிகள் மாத்தறை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவப் பீடத்திற்கு அதி உயர் இசற்ஸ்கோராக 1.8006 என்ற புள்ளிகள் கொழும்பு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான வைத்திய பீட அனுமதிக்கான இசற்ஸ்கோர் 1.9435 புள்ளியாகவும், பொறியியல் பீடத்திற்கு 1.9874 புள்ளியாகவும், முகாமைத்துவ பீடத்திற்கு 1.6913 புள்ளியாகவும், கலைப்பீடத்திற்கு 1.4224 புள்ளியாகவும், சட்டப் பீடத்திற்கு 1.6203 புள்ளியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாணவர்களுக்கான வைத்தியபீட அனுமதிக்கான இசற்ஸ்கோர் 1.8041 புள்ளியாகவும், பொறியியல் பீடத்திற்கு 1.4826 புள்ளியாகவும், முகாமைத்துவப் பீடத்திற்கு 1.4703 புள்ளியாகவும், கலைப் பீடத்திற்கு 1.4224 புள்ளியாகவும், சட்டப்பீடத்திற்கு 1.8179 புள்ளியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை பல்கலைக்கழகங்களுக்கு இசற்ஸ்கோர் அடிப்படையில் தெரிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 623 ஆகும். இவர்களில், வைத்திய பீடத்திற்கு 899 மாணவர்களும், பொறியியல் பீடத்திற்கு 861 மாணவர்களும், முகாமைத்துவப்பீடத்திற்கு 2131 மாணவர்களும், சட்டப் பீடத்திற்கு 199 மாணவர்களும்விவசாய பீடத்திற்கு 740 மாணவர்களும், கலைப் பீடத்திற்கு 3256 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை - விசேட அனுமதித் திட்டத்தின்கீழ் - 1000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## நீர்வடிகாலமைப்பு ஊழியர்கள் 4 மணிநேரப் போராட்டம்

(கொழும்பு)

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு ஊழியர்கள் நேற்று முதல் நான்கு மணிநேரப் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தொடருமென அறிவிக்கப்பட்டது.

தனியார் மயமாக்கல், வேதன உயர்வு ஆகிய கோரிக்கைகளை அடிபபடையாகக் கொண்டே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி நீர்ப்பாசன வழங்கல்களை முழுமையாக நிறுத்தப்போவதாகவும், இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களின் இந்தப் போராட்டம் காரணமாக எதிர்வரும் 17 ஆம் திகதி நாட்டில் நீர் வழங்கல் சேவையில் பாதிப்பு ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## படையினர் சம்பந்தப்பட்ட மூன்று விவசாயிகளின் கொலை தீர்ப்பு இன்று வெளிவரவுள்ளது!

விவசாயிகள் மூவரை வெட்டிக் கொலைசெய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள மூன்று இராணுவத்தினர் மீதான வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியால் இந்தத் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் திகதி வவுனியா சாளம்பைக்குளத்தைச் சேர்ந்த மூவர் இராணுவத்தினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

சாட்சிகளினால் சந்தேகநபர்கள் இனங்காட்டப்பட்டனர்.

தாமோதரம்பிள்ளை, புவனேந்திரராஜா, கனகசபை கனகேந்திரம் ஆகிய விவசாயிகளே காட்டுப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு மூன்று இராணுவ வீரர்களால் வெட்டிக் கொல்லப்பட்டவர்களாவர். (01)

## சுகாதார ஊழியர்கள் இன்றுமுதல் போராட்டம்

சுகாதார சேவை ஊழியர்கள் இன்றைய தினம் முதல் மறியல் போராட்டம் ஒன்றினை நடத்தத்திட்டமிட்டுள்ளனர்.

ஏற்கனவே, பலபோராட்டங்களை நடாத்திய சுகாதார ஊழியர்கள் - அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல மகஜர்களை கொடுத்திருந்தனர்.

இவர்களின் கோரிக்கையை சுகாதார அமைச்சர் தயாரட்ண நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.

அமைச்சரவை இந்த ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தனர் என்றும், இது தொடர்பாக நேற்று கூடி ஆராய்ந்த சுகாதார ஊழியர்கள் போராட்டத்தை நடத்துவதாக தீர்மானித்துள்ளனர். (01)

## நாரதசந்தி

" ஹர்த்தால் என்றால் இது தான் ஹர்த்தால் "

" சரியாச் சொன்னாய் மணியம்.... தண்ணி வென்னி குடிக்க ஒரு கொட்டில்கூட திறக்கேல்லை.... "

" கொட்டில் என்றால்....? " என்று இழுத்தார் கனகர்.

" உனக்கெப்பவும் அந்தக் கொட்டில் நினைவுதான்... நான் ஒரு கடைகண்ணி திறக்கேல்லை எண்டன்..."

" ஹர்த்தால் எப்பவும் சனத்திற்கு கஷ்டத்தைத்தான் தரும் என்று தெரிந்தும் சனமும் ஒத்துழைச்சு நடந்துகொண்டது பெரிய விஷயமெல்லே..."

" எல்லாம் சரி.... எத்தனை ஹர்த்தால், எத்தினை கடையடைப்பு...., எத்தினை பேரணி நடத்தியென்ன.... இராணுவத்தினருக்கு ஒன்றும் விளங்கியதாக இல்லையே.. தொடர்ந்தும் ஏதோ ஒன்றைச் சொல்லிக் கொண்டுதானே இருக்கினம்..."

" அதுக்கென்ன செய்யிறது... அவையிட சுபாவம் அதுதான்... சந்திரிகா சமாதானத்திற்கான யுத்தத்திற்கென்றே அவையை தயார்படுத்தி வைத்திருக்கிறாவெல்லே...."

" அப்படியென்றால் யுத்தமொன்றை தொடங்குவதற்காகத்தான் இப்படியெல்லாம் செய்யினமே....? "

" இப்படி எதையாவது செய்து சீண்டிக்கொண்டே இருந்தால் ஏதாவது ஒரு கட்டத்திலே அது யுத்தமாக மாற சந்தர்ப்பம் இருக்கெண்டுதானே அவை நினைக்கினம்...."

" ஆக... சமாதானத்தை எந்தவகையிலாவது குழப்பவேண்டுமெண்டுதான் படைத்தரப்பினர் சிலர் நெடுக ஏதாவதுசெய்து எங்கடை சனத்தை எரிச்சலூட்டிக்கொண்டிருக்கினம் போலை....!"

" ஓமோம்.... சமாதானம் குழம்பினால் சண்டை வரும் சண்டை வந்தால் பழையபடி தங்கடை அட்டகாசத்தை ஆரம்பிக்கலாம் தானே...."

" ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம், நாடு குழம்பினால் அரசியல்வாதிக்கு கொண்டாட்டம் சமாதானம் குழம்பினால் சண்டை விரும்புவர்களுக்குக் கொண்டாட்டம்.... எதையெதை கொண்டாடிறது என்பதற்கு ஒரு விவஸ்தையே இல்லாமல் போட்டுது கனகு...."

" அரசு எவ்வழியோ படைகளும் அவ்வழி தானே.....! "

" நீ பிழையாச் சொல்லுறாய் அரசி எவ்வழியோ படைகளும் அவ்வழியென்று சொல்லு...."

-தெருவாசி

## தேசப்பற்று முன்னணியினர் இந்தியத் தூதுவரைச் சந்திப்பு!

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலையில் இந்தியா எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பாக, தேசப்பற்று தேசிய முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தியத் தூதுவரிடம் விளக்கிக் கூறியுள்ளனர்.

தேசப்பற்று முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலர் இந்தியத் தூதுவரைச் சந்தித்தபோது அவரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இந்த மகஜரில் விடுதலைப்புலிகள், அரசாங்கத்திடம் கையளித்துள்ள தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் குறித்தும் விபரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகளின் இந்த யோசனைகள் சமஷ்டி அரசாங்கத்துக்கு அமைவாக இல்லாமல் தனித் தமிழ் ஈழத்திற்கான வரைபாக இருப்பதாக இந்தியா தெரிவித்திருந்த தேசப்பற்று தேசிய முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விசேட பயிற்சிபெற்ற...

தெரிவு செய்யப்பட்டிருந்தன.

பயிற்சிநெறி பூர்த்தி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பங்குபற்றியிருந்தார். இவரே இந்தப் பயிற்சி நெறியை அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

விசேட படை நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மோட்டார் சைக்கிள் பயிற்சி, பரசூட்மூலம் குதித்தல் போன்ற பயிற்சிகள் இந்தப் படையினருக்கு வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் பலாலியில் நடந்த பயிற்சி நெறிப் பூர்த்தி நிகழ்வின் அணிவகுப்பின் பின்னர் ஹெலியில் இருந்து குதித்தல், மோட்டார் சைக்கிள் சாகசம் என்பன படையினரால் நிகழ்த்தப்பட்டன.

இந்த நிகழ்வில் உரைநிகழ்த்திய மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, எதிரியைத் தோல்வியடையச் செய்து நாட்டில் ஒருமைப்பாட்டையும், தேசியத்தையும் கட்டிக் காப்பதில் முக்கிய பங்காற்றவேண்டும் என்ற நோக்கில்தான் இந்த விசேட பயிற்சிகள் வழங்கப்படுவதாக் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தப் பயிற்சி நெறிக்குரிய அங்கீகாரத்தை வழங்கும் விடயத்தில் இராணுவத் தளபதி சாதகமாக நடந்துகொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க...

நிக்கல்ஸ் மன் என்ற அதிகாரியே கொழும்பு வருவுள்ளார்.

அடுத்த வாரம் கொழும்பு வரவிருக்கும் இவர் - பல்வேறு அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதுடன், அரசியல் தலைவர்களுடனும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும், தனிப்பட்ட பிரமுகர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார். யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்யும் இவர், அரச அதிகாரிகள் மற்றும் பல்வேறு தரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசுவதுடன், இங்குள்ள நிலைமைகளையும் நேரில் அவதானிக்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

## நேர்முகத்தேர்வு

நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களின் பணிநிலை வேண்டுகைகளுக்கான நேர்முகத்தேர்வு

**11.12.2003 வியாழக்கிழமை நடைபெற்ற நேர்முகத் தேர்விற்கு சமூகம் தராதோர் இன்று (12.12.2003) நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம்**

நேர்முகத்தேர்வு இடம்:
**வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்ப்பாணம்.**
(கைலாயபிள்ளையார் கோயில் அருகாமை)

காலம் :
12.12.2003 வெள்ளி காலை 10மணி

குறிப்பு : நேர்முகத்தேர்வின் முன்னர் விண்ணப்பதாரிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு நடைபெறும்.

நீதித்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்

## பஸ் நிலைய...

ஏனைய பயணிகள் வாகன வசதிகள் இன்றி பஸ்தரிப்பு நிலையத்தில் தரித்து நின்றதையும் காணமுடிந்தது.

வழமையாக சனநெருக்கமும், வாகன நெருக்கமும் மிக்கதாக காணபடும் முக்கிய வீதிகளான ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி அனைத்தும் நேற்று வெறிச்சோடி காணப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையிலும் வெளிநோயாளர்களின் எண்ணிக்கை வழமையைவிட வெகு குறைவாகவே காணப்பட்டது. நண்பகல் வரை நடைபெறும் வெளிநோயாளர் சேவை நேற்று காலை 10 மணிக்கு முன்பாகவே முடிவுற்றது.

உணவகங்கள், மருந்தகங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகள் கூட மூடப்பட்டிருந்த நிலையிலும், சில கடைகள் ஒற்றைக் கதவில் இயங்கியமையையும் காணக்கூடியதாகவிருந்தது.

ஹர்த்தாலை முன்னிட்டு அசம்பாவிதங்கள் ஏதும் நிகழலாம் எனும் நோக்குடன் நகரப் பகுதி எங்கும் பெருமளவான பொலிஸார் கடைமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனாலும், குறிப்பிடத்தக்கவிதத்தில் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை.

அதேவேளை, நகருக்கு வெளியேயும் ஹர்த்தால் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்தைகள் எதுவும் நேற்று இயங்கவில்லை. கடைகள் அனைத்தும் கதவடைப்பு செய்யப்பட்டு மக்கள் முழுமையான தமது எதிர்ப்பை பஸ்நிலைய சம்பவத்திற்கு எதிராக வெளிப்படுத்தினர்.

நேற்று நிறைவுபெற்ற க.பொ.த. (சா.த) பரீட்சைகள் எதுவித தடங்கலுமின்றி வழமைபோல நடைபெற்றன. அரச அலுவலகங்களில் காலை வேளையில் ஊழியர்கள் வருகை தந்திருந்த போதிலும், அனேகமாக அலுவலகங்கள் நண்பகலுக்கு முன்பதாகவே தமது வேலைகளை நிறுத்திக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ச)

## பாதுகாப்பு அமைச்சை...

சின் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதிக்கு பிரதமர் விளக்களித்தார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி, சமாதான முயற்சியைக் கருத்திற்கொண்டு அதனை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதில் தவறேதும் இல்லை. இதனை விடுத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சு ஒன்றை அரசாங்கத்திடம் வழங்க முயற்சிப்பது சமாதானத்தை முன்கொண்டு செல்வதற்கான வழிமுறையில் எந்தவித முன்னேற்றத்தையும் தராது.

அத்துடன் ஜனாதிபதியுடனான சந்திப்பில், பிரதமர் இரண்டு விடயங்களை முன்வைத்தார். முதலாவது சமாதான பேச்சுவார்த்தைகளின் அடுத்தகட்டம், இரண்டாவது பாதுகாப்பு விடயம். இது சமாதான முன்னெடுப்பில் செலுத்தும் முக்கியத்துவம் என்பனவாகும்.

கடந்த வருடம் பாதுகாப்பு உட்பட அனைத்து அதிகாரங்களும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்த காரணத்தாலேயே விடுதலைப்புலிகளும் பேச்சுகளுக்கு முன்வந்தனர் அதனடிப்படையிலேயே போர்நிறுத்தமும் கைச்சாத்திடப்பட்டது. எனினும், கட ந்த மாதம் நான்காம் திகதி இடம்பெற்ற நடவடிக்கைகளை அடுத்து, சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேயும் அதிலிருந்து விலகிச் சென்றது.

ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதற்காகவே முயற்சி மேற்கொண்டார். ஆனால், அது தோல்வி அடையவே தேசிய அரசாங்கம் பற்றி பேசுகிறார். மாற்று அரசொன்றை அமைக்க ஜனாதிபதியும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியைப் பெற முயற்சித்தனர். ஆனால் அது நடக்கவில்லைமேற்படி நடவடிக்கைகளுக்குப் ஜனாதிபதியின் தேசிய அரசு என்ற நிலைப்பாடு யதார்த்தத்திற்கு பொருத்தமானதல்ல. அத்துடன், ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட உதவிப் பாதுகாப்பு அமைச்சைக்கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கமுடியாது. அத்துடன் விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் பூரண அதிகாரம் கொண்ட அரசாங்கத்தை அமைக்கமுடியாது.

ஜனாதிபதியின் நடவடிக்கையால் 15 ஆயிரம் பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். சுமார் 150 மில்லியன் டொலர் முதலீடு இலங்கைக்கு கிடைக்காமல் போயுள்ளது எனவும் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்...

மேஜர் ஜெனரல் பரம்ஜித்சிங் இவரை வரவேற்றார்.

இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்புத்துறை தொடர்பான ஒத்துழைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கை இராணுவத் தலைமைத் தளபதியின் வருகை முக்கியத்துவம்பெற்றதாக இந்திய இராணுவம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

## உழவு...

நிலையில் கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

கிளிநொச்சி - அம்பாள்நகர் சாந்தபுரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சின்னத்தம்பி (வயது 20) என்ற இளைஞரரே உயிரிழந்தவராவார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.